| வெள்ளி | செப்டெம்பர் 1 | 📖 மாலை வாசகம் – உபா 8:11 – 19 |
|---|---|

# தேவன் எங்கே?

ஒரு தேசத்திலே ஏற்பட்ட எதிர்பாராத பயங்கரமான அழிவினால், பாரிய இழப்புக்களும், பெரிதான பாதிப்பும் ஏற்பட்டது. அந்த வேளையிலே தேவன் எங்கே? ஏன் இத்தகைய பேரழிவு என்று சில கூட்டத்தைச் சேர்ந்த மனிதர்கள் குரலெழுப்பினார்கள். தேவன் எப்போதும் இருக்கின்றவராய் இருக்கின்றார். தேவன் ஒருபோதும் மாறாதவராய் இருக்கின்றார் என்றும் உங்கள் வாழ்க்கையிலே தேவனை நீங்கள் எங்கே வைத்திருக்கின்றீர்கள் என்றும் ஒரு போதகாரனவர் கேட்டார். தங்கள் சரீரமானது, தாங்கள், தேவனாலே பெற்றதும், பரிசுத்த ஆவியானவர் தங்கியிருக்கும் ஆலயமாயிருக்கிற இருக்கின்றதென்பதை அற்பாக எண்ணி, தங்கள் சரீரங்களை தீட்டுப்படுத்தி, தங்கள் இருதங்களை கேளிக்கை விடுதிகளைப் போல மாற்றியது யார்? குடும்பத்திலே, பாடசாலைகளிலே, தேசத்திலே தேவன் போட்ட பாதுகாப்பின் எல்லைகளை தகர்த்து, திருடனை உள்ளே விட்டது யார்? திருடன் திருடவும் கொல்லவும் அழிக்கவும் வருகிறானேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன் என்று ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார். பிரியமான சகோதர சகோதரிகளே, ஜீவனையும் மரணத்தையும், ஆசீர்வாதத்தையும் சாபத்தையும் தேவனாகிய கர்த்தர் நம் முன்னே வைத்திருக்கின்றார். ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் கர்த்தராகிய இயேசு வந்தார். திருடனாகிய பிசாசானவன் ஆதிமுதல் வஞ்சிக்கின்றவனாகவே இருக்கின்றான். அவனுடைய தந்திரங்கள் நல்லதும், இன்பமும், புத்தியை தெளிவிக்கின்றது போலவும் இருக்கும். இவை யாவும் இந்த உலகத்தின் போக்கிற்குள் உட்பட்டிருக்கின்றது. சில தேவபிள்ளைகள் கூட, ஏவாளைப் போல தேவனுடைய ஆலோசனைகளைத் தள்ளிவிட்டு, இந்த உலகத்தின் போக்கிற்கு இடங் கொடுக்கின்றார்கள். அவர்கள் வழியாக குடும்பங்களும் தேவனைவிட்டு தூரம் சென்று விடுகின்றது. குடும்பங்கள் வழியாக சமுகங்களும், சமுகங்கள் வழியாக தேசமும் தீட்டுப்பட்டுப் போகின்றது. மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டானவைகள். எனவே பொல்லாங்கனாகிய பிசாசானவனிற்கும் உலக போக்கிற்கும் சற்றும் இடங் கொடுக்காமல், ஆண்டவர் இயேசுவின் சத்தத்திற்கு செவிகொடுப்போமாக.

**யோவான் 10:10**

நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப் படவும் வந்தேன்.

**ஜெபம்:** என்மேல் உம் கண்ணை வைத்து ஆலோசனைகளை தந்து நடத்தும் தேவனே, நான் உம்முடைய ஆலோசனைகள் ஒன்றையும் அற்பமாக எண்ணாமல், அதற்குள் வாழ உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# இது என் எஜமானனானவனின் சத்தம்

ஒரு கிராமத்திலே, அதிகாலை வேளையிலே, வழமைபோல வயலிலே வேலையாட்கள், நாற்றுக்களை பராமரித்துக் கொண்டிருந்தார்கள். தீரென்று அந்த வயலின் அருகே இருந்த குறுகிய பாதை வழியாக, பட்டணத்திலிருந்து வந்த வாலிபனானவனொருவன், மோட்டார் சைக்கிளை மிக வேகமாக ஓட்டிச் சென்றான். அந்த வேளையிலே, வயலின் ஒரு பக்கமாக இரு ந்த மரங்களில் தங்கியிருந்த பறவைகள் யாவும், சற்றும் காலம் தாமதிக்காமல், கூட்டமாக பறந்து சென்றுவிட்டன. வயலின் வேலை யாட்கள், தங்கள் வேலைகளை நிறுத்தி, வழமைக்கு மாறாக ஒரு புதிய காரியமொன்று நடக்கின்றதே என்று புதினமாக தங்கள் கண்களை ஏறெடுத்துப் பார்த்தார்கள். மிருகங்கள், பறவைகள் யாவும் வழமைக்கு மாறான அந்நிய சத்தங்களை கேட்கும் போது, அவைகள் யாவும் அந்த இடத்தை விட்டு, உடனடியாக சென்றுவிடுகின்றது. அவைகள் ஒன்று கூட நின்று, இந்த விநோதமான காரியத்தை பார்ப்போம் என்று ஒருபோதும் கூறுதில்லை. ஆனால், மனிதனோ, அந்நிய காரியங்களையும், விநோதமானவைகளையும் அறிய விருப்பமுள்ளவனாக இருக்கின்றான். அனுதினமும், இந்த உல கத்தின் சத்தமும், மாம்சத்தின் சத்தமும், பிசாசானவனின் வஞ்சகமான சத்தமும் இணைந்து ஒலிக்கின்றது. அவைகள் மத்தியிலும் நம்முடைய மேய்ப்பனாகிய இயேசுவின் சத்தமும் தொனிக்கின்றது. எனவே, மனிதனானவன், தன்னுடைய எஜமானனாகிய இயேசுவின் சத்தம் எது என்பதை நன்றாக அறிந்திருக்க வேண்டும். இன்று பல மனிதர்கள் எஜமானானாகிய இயேசுவின் சத்தத்தை அசட்டை செய்கின்றார்கள். அவர்களுக்குள் சில விசுவாசிகளும் தங்களை சிக்க வைத்துக் கொள்கின்றார்கள். மாடு தன் எஜமானனையும், கழுதை தன் ஆண்டவனின் முன்னணையையும் அறியும் தன்னுடைய ஜனங்களோ அறிவில்லாமலும், உணர்வில்லாமலும் இருக்கின்றார்கள் என்று தேவனாகிய கர்த்தர் தாம் அழைத்த தம்முடைய ஜனத்திற்கு கூறினார். இன்று சிலர், அதை அறிந்தால் என்ன? இதை தொட்டால் என்ன? என்று தாம் அறியாத அந்நிய காரியங்களுக்குள் துணிகரமாக நுழைகின்றார்கள். நீங்களோ, மேய்ப்பனாகிய ஆண்டவர் இயேசுவின் சத்ததை திட்டமாக அறிந்து கொள்ளுங்கள். வேதத்தை வாசியுங்கள், வாசித்தவைகளை தியானியுங்கள். எல்லாவற்றையும் வேத வார்த்தையின் வெளிச்சத்தில் சோதித்துப்பார்த்து, நலமானதைப் பிடித்துக்கொள்ளுங்கள். பொல்லாங்காய்த் தோன்றுகிற எல்லாவற்றையும் விட்டு விலகுங்கள்.

**யோவான் 10:4**

**ஆடுகள் அவன் சத்தத்தை அறிந்திருக்கிறபடியினால் அவனுக்குப் பின்செல்லுகிறது.**

**ஜெபம்:** என் எஜமானனாகிய தேவனாகிய கர்த்தாவே, நான் ஒரு போதும் அந்நிய சத்தங்களை கேட்டு, ஜீவ வழியைவிட்டு, அழிவின் பாதைக்கு சென்றுவிடாதபடிக்கு என்னை காத்து நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# கணக்கு கொடுக்கும் காலம் சமீபம்

ஒரு வாலிபனானவன், குடித்து வெறிக்கும் பழக்கமில்லாதவனாகவும், நெறிகெட்ட திரைப்படங்களை பார்க்காமலும், புகைப்பிடிக்கும் பழக்கம் இல்லாதவனாகவும், களியாட்டங்களிலே ஈடுபடாதவனாகவும் வாழ்ந்து வந்தான். அதைக் கண்டு கொண்ட அவனுடைய வயதுக்கொத்த மற்றய வாலிபர்கள் சிலருக்கு அது மிகவும் நகைப்புக்குரியதாக இருந்தது. வேறு சிலர், அவனைக் கண்டதும் மனதில் எரிச்சலடைந்து புறம்போக்கன் வருகின்றான் என்று சொல்லிக்கொள்வார்கள். இன்னும் சிலர் அவனோடு எப்போதும் விதண்டாவாதம் செய்து கொண்டே இருந்தார்கள். நாம் ஆண்டவர் இயேசுவை அறிய வேண்டிய பிரகாரமாக அறிய முன்பு, இந்த உலகத்தின் இஷ்டத்தின்படி நடந்துகொண்டு, காமவிகாரத்தையும் துர்இச்சைகளையும் நடப்பித்து, மதுபானம்பண்ணி, களியாட்டுச்செய்து, வெறிகொண்டு, அருவருப்பான விக்கிரகாராதனையைச் செய்துவந்தோம். அப்படியாக, துன்மார்க்க உளையிலே வாழ்ந்து கொண்டிருந்த நம்மை, நம் ஆண்டவராகிய இயேசுதாமே, தூக்கியெடுத்து, நம் பாவங்கள் நீங்க நம்மைக் கழுவி சுத்திகரித்தார். தம்முடைய திவ்விய ஒளியை நம்மில் பிரகாசி ப்பிக்கப் பண்ணினார். அதனால் நம்முடைய மனக் கண்கள் பிரகாசம் அடைந்தது. தற்போது, உலகத்திற்குரிய துன்மார்க்க உளையிலே அவர்களோடேகூட நீங்கள் விழாமலிருக்கிறதினாலே அவர்கள் ஆச்சரியப்பட்டு, உங்களைத் தூஷிக்கிறார்கள். அவர்களும் அழிந்து போகாமல் மீட்கப்படும்படி, அவர்களுக்கும் சுவிசேஷமானது அறிவிக்கப்பட்டது. (1 பேதுரு 4:3-6) "ஒளியானது உலகத்திலே வந்திருந்தும் மனுஷருடைய கிரியைகள் பொல்லாதவைகளாயிருக்கிறபடியினால் அவர்கள் ஒளியைப்பார்க்கிலும் இருளை விரும்புகிறதே அந்த ஆக்கினைத்தீர்ப்புக்குக் காரணமாயிருக்கிறது. பொல்லாங்கு செய்கிற எவனும் ஒளியைப் பகைக்கிறான், தன் கிரியைகள் கண்டிக்கப்படாதபடிக்கு, ஒளியினிடத்தில் வராதிருக்கிறான்" என்று ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார். (யோவான் 3:19-20). எனவே, உங்கள் நல்நடக்கைகளைக் குறித்து பரியாசம் பண்ணுகின்றவர்களைக் கண்டு சோர்ந்து போய்விடாதிருங்கள். எல்லாவற்றிற்கும் முடிவு சமீபமாயிற்று ஆகையால் தெளிந்த புத்தியுள்ளவர்களாயிருந்து, ஜெபம்பண்ணுவதற்கு ஜாக்கிரதையுள்ளவர்களாயி ருங்கள். உங்களை அழைத்தவர் உங்களோடு இருக்கின்றார்.

**1 பேதுரு 4:5**

**உயிரோடிருக்கிறவர்களுக்கும் மரித்தோர்களுக்கும் நியாயத் தீர்ப்புக்கொடுக்க ஆயத்தமாயிருக்கிறவருக்கு அவர்கள் கணக்கொப்புவிப்பார்கள்.**

**ஜெபம்:** பரிசுத்தத்திற்கென்று என்னை வேறுபிரித்த தேவனே, மாம்ச இச்சையை நிறைவேற்றாதபடிக்கும், ஆவிக்கேற்றபடி நடந்துகொள்ளும்படிக்கு, எனக்கு உற்சாகத்தின் ஆவியை தந்து வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

திங்கள் | செப்டெம்பர் 4 | 📖 மாலை வாசகம் – 1 பேதுரு 1:14 –16

# உங்களை குழப்புகின்றவர்கள் யார்?

வாழ்க்கையை அனுபவிக்க வேண்டும். இதை குடிக்கக்கூடாது என்று ஆண்டவர் உனக்குச் சொன்னாரோ? இதைப் பார்க்கக்கூடாது என்று ஆண்டவர் உனக்கு கூறினாரோ? என்று ஒரு மனிதனானவன் ஒரு விசுவாசியானவனை அடிக்கடி தொந்தரவு செய்து கொண்டிருந்தான். அந்த மனிதனோடு வாக்குவாதம் செய்வதில் பயனில்லை என்று உணர்ந்து கொண்ட அந்த விசுவாசியானவன், அவனை நோக்கி: தேவன் நம்மை பரிசுத்தத்திற்கென்று வேறுபிரித்தார். நீ வெறி கொண்ட பின்பு, உனக்குள் வரும் சிந்தனைகளும், நீ பேசும் பேச்சுக்களையும் நீ ஆராய்ந்து பார். நீ நெறி கெட்ட திரைப்படங்ளைப் பார்த்து ஆகாத கதை வசனங்களை கேட்கின்ற போது உன் சிந்தை எதனால் நிறைந்திருக்கின்றது என்று எண்ணிப்பார். மோசம்போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம்பண்ணவொட்டார் மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான். தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன் மாம்சத்தினால் அழிவை அறுப்பான் ஆவிக்கென்று விதைக்கிறவன் ஆவியினாலே நித்தியஜீவனை அறுப்பான் என்று பரிசுத்த வேதாகமம் கூறுகின்றது. எனவே நீ எதை விதைக்கின்றாய் என்பதைக் குறித்து எச்சரிக்கையாயிரு என்று அந்த மனிதனானவனுக்கு விசுவாசியானவன் பதில் கூறினான். அந்த மனிதனானவன், அந்த விசுவாசியைக் காணும் வேளைகளிலெல்லாம், தனக்குள் உண்டாகும் குற்ற உணர்வினாலேயே, இதை குடிக்காதே, அதை பார்க்காதே என்று தேவன் கூறினாரோ என்ற கேள்வியை கேட்டுக் கொண்டான். நாம் பரிசுத்த வேதாகமத்தை ஆராய்ந்து பார்ப்போமென்றால், இத்தகைய தொனியிலே பேசியது யார் என்பதை காணமுடியம். “நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்கவேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ” என்று சர்பமாகிய பிசாசானவன், பாவமறியாத ஏவாளை கேட்டான். உத்தமனும் சன்மார்க்கனும், தேவனுக்குப் பயந்து, பொல்லாப்புக்கு விலகுகிறவனுமாயிருந்த யோபுவைக் குறித்து விஷயத்தில், சாத்தான் கர்த்தரை நோக்கி கூறியதாவது: யோபு விருதாவாகவா தேவனுக்குப் பயந்து நடக்கிறான்? நீர் அவனையும் அவன் வீட்டையும் அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் சுற்றி வேலியடைக்கவில்லையோ? பிரியமானவர்களே, பிரதிஷ்டையுள்ள உங்கள் பரிசுத்த வாழ்க்கைக் குறித்து பரிகாசம் பண்ணி, விதண்டா வாதம் பண்ணுகின்றவர்களைக் குறித்து, குழப்பமடையாமல், மன உறுதியடன் தேவனுக்குள் முன்னேறுங்கள்.

**கலாத்தியர் 6:7**

**மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்.**

**ஜெபம்:** என் தேவனாகிய கர்த்தாவே, பரியாசக்காரின் வார்த்தைகளினால் நான் சோர்ந்து போய், இந்த உலகத்தின் முறைமைகளுக்கு இடங்கொடுக்காதபடிக்கு எனக்கு பிரகாசமுள்ள மனக்கண்களை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# யாருடைய ஆலோசனை நல்லது?

கல்வி கற்று, பட்டம் பெற்று, நல்ல உத்தியோகத்தை செய்து வரும் ஒரு ஸ்திரியானவள், பாடசாலையிலே உயர்தரத்திலே கல்வி கற்று வரும் மாணவியானவளுக்கு வாழ்க்கையை குறித்த தன் ஆலோசனைகளைக் கூறினாள். “நீ உன் பெற்றோரின் வார்த்தையையும் கேட்டு அதன்படி செய்யத் தேவையில்லை, என்னுடைய அறிவுரைகளிலும் கூட நடக்கத் தேவையி ல்லை. உன் இருதயம் உனக்கு என்ன சொல்கின்றதோ எது உனக்கு சரியாக தெரிகின்றதோ அதையே நீ செய்” என்று ஆலோ சனை கூறினாள். அந்த அறிவுரை யானது அந்த மாணவியின் மன திற்கு இதமாக இருந்தது. அவ ளுடைய முகம் மலர்ந்தது. அவ ளுடைய மனதின் உணர்வுகளை துண்டிவிட்டது. தன்னுடைய அறி வுரையையும் கேட்க வேண்டாம் என்று ஆலோசனை கூறிய அந்த ஸ்தி ரியானவளின் ஆலோசனையே அந்த மாணவி ஏற்றுக் கொண்டாள். என் மகனே, உன் தகப்பன் புத்தியைக் கேள், உன் தாயின் போதகத்தைத் தள்ளாதே. அவைகள் உன் சிரசுக்கு அலங்காரமான முடியும், உன் கழு த்துக்குச் சரப்பணியுமாயிருக்கும். (நீதி 1:8-9). உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிரு ந்து, உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள் அப் பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார் (நீதி 3:5-6) என்று பரி சுத்த வேதாகமத்தின் ஆலோசனை அற்பமாக எண்ணுகின்ற மனிதர்கள், கர்த்தருக்கு பயப்படுதலை அற்பமாக எண்ணுவதால், அவர் கள் தேவ ஞானத்தை நிராகரிக்கின்றார்கள். தங்கள் சுயஞானத்திற்கு இடங்கொடு த்து, அதன்படி வாழ்க்கையை நடத்துகின்றார்கள். உன் கனவை நீ பின்பற்று என்ற சித்தாந்தத்தையே மேற்கத்தைய திரைப்படங்கள், நேர டியாகவோ, மறைமுகமாகவோ, பிள்ளைகளின் மனதிலே திணிக் கி ன்றது என்று ஒரு மேற்கத்தைய நாட்டை சேர்ந்த போதகர் கூறினார். மேலும், மனிதர்களுடைய சித்தாந்தங்களை குறித்து எச்சரிக்கையா யிருங்கள் என்று அவர் அறிவுரை கூறினார். தேவனுடைய விசுவாசக் குடும்பத்தாராகிய நாம், பிள்ளைகளுக்கு தேவ ஞானத்தை கற்று கொடு க்க வேண்டும். பிள்ளைகள் மாத்திரமல்ல, வளர்ந்தவர்களும், இந்த உலக சித்தாத்தங்களை குறித்து விழிப்புள்ளவர்களாக இருக்க வேண் டும். அவைகள் கேட்பதற்கு இதமாக இருக்கும். குறுகிய காலத்திற்கு நலமாக தோன்றும், இறுதியிலே, அவைகள் உங்களை படுகுழிக்குள் தள்ளிவிடும்.

**நீதிமொழிகள் 1:9**

**அவைகள் உன் சிரசுக்கு அல ங்காரமான முடியும், உன் கழுத்துக்குச் சரப்பணியுமா யிருக்கும்.**

**ஜெபம்:** நான் உனக்குப் போதித்து, நீ நடக்கவேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்; என்று உரைத்த தேவனே, உம்முடைய ஆலோசனையின் வழியிலே நான் எப்போதும் நடக்க எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பார்வைக்கு செழிப்பானவைகள்

தன் பட்டப்படிப்பை முடித்து, புதிதாக வேலைக்கு சேர்ந்த வாலிபனா னவன், தன் இயக்குனரைக்குறித்து பெருமையாக பேசிக் கொண்டான். உலகத்திலேயே பிரபல்யமான பல்கலைகழகத்திலே மேற்படிப்புகளை அதி விசேஷட சித்தியோடு முடித்து, மிகவும் குறுகிய காலத்திலே பத வியுயர்வுகளை பெற்று, தன் இளவயதிலேயே சிரேஷ்ட இயக்குனராக வேலை செய்கின்றார். தானும் அவ ருடைய வழியை பின்பற்ற வேண்டும் என்று அவரை தன் நல் நம்பகமான ஆலோசகராக (Mentor) ஏற்படுத்திக் கொண்டான். உலகத்தைக் குறித்து எந்த அனுபவமும் இல்லாத தன் மக னானவனுடைய வழிகள் சற்று மாற் றமடைவதைக் கண்ட தகப்பனானவர், தன் மகனை அழைத்து அவனோடு பேசினார். மகனே, நீ உன்னுடைய இயக்குனருக்கு கனத்தை கொடு ப்பது நல்லது. ஆனால் நீ அவரை உன் வாழ்வின் நம்பகமானதொரு ஆலோசகராக வைத்திருப்பதைக் குறித்து எச்சரிக்கையாயிரு. ஒரு மனி தனுடைய வாழ்வின் வெற்றியின் ஒருபக்கத்தை மட்டும் பார்க்காதே. உன் இயக்குனர் உன் வயதில் இருக்கும் போது தேவனுக்கு பயந்து நடந்தாரா? இப்போது அவருடைய நம்பிக்கை என்ன? அவருடைய இல க்கு என்ன? என்று அவருடைய வாழ்க்கையின் எல்லா பக்கத்தையும் அறிந்த பின்னர் அவரை உன் முன் மாதியாக வைத்துக் கொள். கர்த்த ருக்கு பயந்து அவர் வழியில் நட, நீ ஞானியாக நடந்து கொள்வாய் என்று ஆலோசனை கூறினார். தன் தகப்பனானவர், கல்வி கற்கவி ல்லை. உலகத்தின் நடப்புக்கள் அவருக்குத் தெரியாது என்ற எண்ணம் அவனுக்கு இருந்ததால், அவன் தகப்பனானவருடைய ஆலோசனையை அற்பமாக எண்ணிக் கொண்டான். பல மாதங்கள் சென்ற பின்னர், அந்த இயக்குனர், அந்த வாலிபனை நோக்கி: நான் வீட்டிலே இருக்கும் நேரம் குறைவு. ஆதலால், மனைவிக்கும் எனக்கும் இடையிலான உறவு உறு தியாக இல்லை. ஆனால், நான் அவளுக்கும் பிள்ளைகளுக்கும் வேண் டிய யாவற்றையும் மிகையாக கொடுத்து வருகின்றேன். பணம் இரு ந்தால் நீ எல்லாவற்றையும் உன் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்காலம் என்று அறிவுரை கூறினார். அதைக் கேட்டு, அதிர்ச்சியடைந்த அந்த வாலிபனானவனின் மனக்க கண்கள் திறக்கப்பட்டன. அன்றிரவே தன் தகப்பனானவர் கூறிய நல்ல ஆலோசனையை குறித்து சிந்தித்து, தன் வழியை கர்த்தருக்கு ஒப்புவிக்க தீர்மானித்துக் கொண்டான்.

**சங்கீதம் 37:5**

உன் வழியைக் கர்த்தரு க்கு ஒப்புவித்து, அவர் மேல் நம்பிக்கையாயிரு; அவரே காரியத்தை வாய் க்கப்பண்ணுவார்.

**ஜெபம்:** பரலோக தகப்பனே, இந்த உலகத்தின் போக்கில் வாழ்கின்ற வர்களின் செழிப்பிலே நான் மயங்கிவிடாதபடிக்கு என்னை காத்து, உம் வழியில் நடக்க உணர்வுள்ள இருதயத்தை தந்த வழிநடத்துவீராக.. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

 📖 மாலை வாசகம் – சங்கீதம் 16:7–8

# வசீகரமாக தோன்றும் உலக வழிகள்

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த எஜமனனானவனொருவனுக்கு அழகான மாளிகையொன்று இருந்தது. அந்நியர்கள் அந்த மாளிகைக்குள் உட்பு காதடிக்கு பலத்த பாதுகாப்பு முறைமைகள் அமைக்கப்பட்டிருந்தது. முக்கிய அலுவலாக அவன் வெளியூருக்கு சென்று வரவேண்டியிருந் ததால், தன் மனைவி பிள்ளைகளை அழைத்து, அவர்களை நோக்கி: நான் இரண்டு கிழமைகளுக்கு வெளியூருக்கு செல்லவேண்டிய அவசி யம் ஏற்பட்டிருக்கின்றது. உங்களுக்கு வேண்டிய யாவையும் ஒழுங் குபடுத்தப்பட்டிருக்கின்றது. நான் திரும்பி வரும்வரைக்கும், இந்த பட்டி யலிலுள்ள நபர்களைத் தவிர வேறு எவரையும், எந்தக் காரண த்தைக் கொண்டும் இந்த வீட்டிற் குள் அனுமதிக்க வேண்டாம் என் று திட்டமாகக் கூறி வெளியூரு க்கு சென்றுவிட்டான். எஜமான னாவன் கூறிய பிரகாரமாக அவனுடைய குடும்பத்தினர் காரியங்களை செய்து வந்தார்கள். சில நாட்கள் சென்ற பின்பு, நேர்த்தியாக உடை களை தரித்து, செம்மையாகவும், மிருதுவாகவும் பேசும் வசீகரமான தோற்றத்தையுடைய மனிதனொருவன், அந்த மாளிகையின் வாசலில் வந்து அந்த குடும்பத்தினரை சந்தித்தான். தன்னை தரமான விற்பனை யாளனொருவனைப் போல காண்பித்த அந்த மனிதனானவன், அவர் களை நோக்கி: உங்கள் வீட்டின் கூரையிலே சில திருத்த வேலைகளு ண்டு என்றும், இந்த மழைநாட்களுக்கு முன் இவைகளை செய்ய வேண்டும் என்று எஜமானானானவர் கேட்டிருந்தார். நாங்கள் முதலில் கூரையை பார்வையிட வேண்டும். அவர் வீடு திரும்பிய பின் திருத்த வேலைகளை ஆரம்பிக்கலாம் என்று அவர்களோடு வசீகரமாக பேசி அவர்கள் மனதை கவர்ந்து கொண்டான். இப்படிப்பட்ட ஒழுக்கமுள்ள மனிதன் தீமை செய்யமாட்டான் என்று கருதி, எஜமானானவனின் அறி வுரையை மீறி, அந்த மனிதனோடு வந்த சில வேலையாட்களை வீட்டார் உள்ளே அனுமதித்தார்கள். அந்த வேலையாட்கள், அந்த வீட்டிற்குள் எப்படி நுழையலாம் என்பதை அறிந்து, அதற்கேற்ப சில உபாயங்களை செய்து, அன்றிரவுவே அந்த வீட்டை கௌ்ளையடித்தார்கள். பிரியமான வர்களே, இவ்வண்ணமாகவே, சில விசுவாசிகளும், தேவனுடைய ஆலோ சனைகளை அற்பமாக எண்ணி, நன்மையும், வசீகரமுமாகத் தோன்றும் இந்த உலகத்தின் கண்ணிகளை தங்கள் வாழ்வில் அனுமதிக்கின்றார் கள். நீங்களோ, உங்கள் உணர்வுகளுக்கு இடங்கொடுத்து, வஞ்சிக்க ப்பட்டு போகாதபடிக்கு, கர்த்தர் கொடுத்திருக்கும் ஆலோசனைகளை காத்து நடவுங்கள்.

**நீதிமொழிகள் 14:12**

மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு; அதின் முடிவோ மரணவழிகள்.

**ஜெபம்:** என் சுதந்தரமும் என் பாத்திரத்தின் பங்குமான தேவனே, தேவரீர், நீர் என் சுதந்திரத்தை காப்பற்றுகின்றவர். நான் சாத்தானின் வஞ்சகமான கண்ணிக்குள் அகப்படாதபடிக்கு என்னை காத்துக் கொள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# உணர்வுகளை ஆராய்ந்து பாருங்கள்

**ரோமர் 8:13**

**மாம்சத்தின்படி பிழைத்தால் சாவீர்கள்; ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள்**

திருமண வயதிற்கு வந்திருந்த வாலிபனொருவன், தான் ஊரிலுள்ள குறிப்பிட்ட பெண்ணொருத்தியை திருமணம் செய்யப் போகின்றேன் என்ற தன் தீர்மானத்தை பெற்றோரிடம் அறிவித்தான். பெற்றோர் அவனுக்கு மறுமொழியாக: மகனே, நீ எப்படிப்பட்டவன் என்பது எங்களுக்கு நன்றாக தெரியும். இந்தக் காரியமானது அந்தப்பெண்ணைக் குறித்த நிறைகுறைஅல்ல. ஆனால், அந்தப் பெண் உன் வாழ்விற்கு பொருத்தமானவளல்ல. நீ நன்றாக சிந்தித்து தீர்மானம் செய்துகொள் என்றார்கள். அதற்கு மகனானவனோ: அப்பா, அம்மா, இது புதிய யுகம். நான் அவளை நன்றாக அறிந்திருக்கின்றேன். அவளை அதிகமாக நேசிக்கின்றேன். எங்களுக்கிடையிலே எதுவும் வரப்போவதில்லை. என் மனதிற்கு ஏற்றவளும், பொருத்தமானவளும் அவளே என்று கூறி, அவளை திருமணம் செய்து கொண்டான். பத்து ஆண்டுகள் சென்றபின், ஒரு நாள் அந்த மகனானவன், இராத்திரி வேளையிலே மிக தீவிரமாக பெற்றோரிடம் வந்து, நீங்கள் சொன்னது சரி, அவள் எனக்கு ஏற்றவளல்ல. அவளை நான் விவாகரத்து செய்யப் போகின்றேன் என்று தன் காரணங்களைக் கூறினான். தகப்பனானவர் அவனை நோக்கி: மகனே, பத்து வருடங்களுக்கு முன் நாங்கள் உனக்கு சொன்ன ஆலோசனையை நீ அசட்டை செய்தாய். இப்போதாவது, எங்கள் அறிவுரையை கேள். இப்போது அவள் "அந்தப் பெண் அல்ல", அவள் உன் மனைவி! உன் பிள்ளைகளின் தாயானவள்! நீ கூறும் காரணங்கள் எதுவும் ஏற்புடையதல்ல. ஒருவரை ஒருவர் புரிந்துகொண்டு, மன்னித்து, விட்டுக் கொடுத்து வாழப் பழகிக் கொள்ளுங்கள். வாழ்க்கையின் தீர்மானங்களை உங் கள் உணர்வுகளின்படி எடுக்கக்கூடாது. முதலாவதாக, தேவ வார்த்தைக்கு கீழ்ப்படிய உங்களை ஒப்புக்கொடுங்கள் என்று அறிவுரை கூறினார். இன்று சில மனிதர்கள் தேவன் நியமித்த ஒழுங்குகளை தள்ளிவிட்டு, தங்கள் சொந்த உணர்வுகளின்படி வாழ்ந்து வருகின்றார்கள். இன்று என் உண ர்வு எப்படி இருக்கின்றதோ அப்படியே நான் என் தீர்மானங்களை எடு ப்பேன். நாளை உணர்வு மாறிப்போனால், என் தீர்மானத்தை மாற்றி விடு வேன் என்று தங்கள் மாம்சசிந்தைக்கு தங்களை ஒப்புக் கொடுக்கி ன்றார்கள். உணர்வுகளின்படி நாம் வாழலாம் என்ற ஒழுங்கானது இந்த உலகத்தினால் அங்கீகாரம பெற்று வருகின்றது, ஆனால், அது தேவனு டைய ஒழுங்கு அல்ல. உங்கள் மாம்சம் விரும்புவதை நீங்கள் நடப்பி க்காமல், தூய ஆவியானவரின் வழிநடத்துதலுக்கு இடங்கொடுங்கள்.

**ஜெபம்**: சகலமும் அறிந்த தேவனே, என் மனவிருப்பத்தை நான் நிறைவேற்றுகின்றவனாக வாழாமல், உம்முடைய வார்த்தைக்கு கீழ்படிந்து தேவசித்தத்தை என் வாழ்வில் நிறைவேற்ற என்னை வழிடநத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# மனதில் தோன்றும் வழிகள்

இன்று பாடசாலை போக வேண்டும் என்று எனக்கு தோன்றவில்லை, எனவே நான் வீட்டில் நிற்கப்போகின்றேன் என்று ஒரு பிள்ளையானவன் தன் தாயரிடம் சொல்லிக் கொண்டான். அதற்கு தாயானவள்: என்ன காரணம்? உனக்கு உடல்நிலை சரியில்லையா என்று கேட்டாள். உடல் நிலையெல்லாம் சரியாகத்தான் இருக்கின்றது, ஆனால் பாடசாலைக்கு போக வேண்டும் என்ற மனவிருப்பம் இன்று எனக்கு இல்லை என்று பிள்ளையானவன் பதிலளித்தான். அப்படியயெல்லாம் உன் மனதிற்கு தோன்றியபடி நீ நடந்தால், நீ படித்து பட்டம் பெறப் போவதில்லை. அடுத்த மாதம் முக்கிய பரீட்சை இருக்கின்றது. எனவே சீக்கிரமாக ஆயத்தப்படு, நான் உன்னை பாடசாலையிலே விட்டு விடுகின்றேன் என்று தாயானவள் கூறினாள். இப்படியான மனிதர்களுடைய வாழ்க்கையிலே மனவிருப்பங்கள் மாறிக் கொண்டே போகின்றது. அந்த மனவிருப்பங்களும், உணர்வுகளும் தேவ வார்த்தைகளுக்கு உட்பட்டிருந்தால், அது அவர்களுக்கு நன்மையை உண்டாக்கும். ஆனால், பொதுவாக மனிதர்கள் தேவன் நன்மை என்று நியமித்த காரியங்களை விட்டு, தாங்கள் தங்களுக்கு நன்மையாக தோன்றும் காரியங்ளை பற்றிக் கொள்கின்றார்கள். அது மட்டுமல்ல, அத்தகைய தங்கள் மாம்சம்சத்தின் உணர்வுகள் நாட்டின் சட்டதிட்டங்களுக்கு விரோதமாக இருந்தால், அப்படிப்பட்ட சட்டதிட்டங்களை மாற்றியமைபதற்கும் மனிதர்கள் இன்று அயராது உழைக்கின்றார்கள். இது உலகத்தின் போக்காக இருக்கின்றது. இன்று, வேதம் வாசிப்பதற்கு மனதில்லை. ஜெபிக்க வேண்டும் என்ற வாஞ்சை இல்லை. ஆராதனைக்கு செல்ல வேண்டும் என்ற உணர்வு இல்லை என்று நாம் நம்முடைய விசுவாச வாழ்க்கையை நம்முடைய உணர்வுகளின்படி வாழக் கூடாது. இப்படியான மனச்சோர்வுகளும், அசதியும் நம் ஆவிக்குரிய போரட்டத்தை மேற்கொள்ள நாம் இடம் கொடுக்க கூடாது. ஏதாவது ஒரு நாளிலே வேதத்தை தியானம் செய்ய வேண்டும் என்று உணர்வு இல்லாதிருந்தால், அந்த நாளிலே இன்னும் அதிமாக வேதத்தை வாசியுங்கள். ஏனெனில் வாழ்வு தரும் வார்த்தைகள் அங்கே உண்டு. தேவனுடைய பாத்தத்திலே கருத்துடன் நேரத்தை செலவிடுங்கள். தேவனை அறிகின்ற அறிவுக்கு விரோதமான எல்லா சிந்தைகளையும், எண்ணங்களையும் கர்த்தருடைய வார்த்தையினாலே அழித்துப் போடுங்கள். கர்த்தருடைய வழிகள் உயர்ந்த வைகள். அந்த வழியிலே நடவுங்கள்.

**ஏசாயா 55:8**

**என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல; உங்கள் வழிகள் என் வழிகளும் அல்லவென்று கர்த்தர் சொல்லுகிறார்.**

**ஜெபம்**: என் தேவனாகிய கர்த்தாவே, நான் உமது சத்தியத்திலே நடக்கும்படி நீர் உமது வழியை எனக்குப் போதித்தருளும்.; நான் உமது நாமத்திற்குப் பயந்திருக்கும்படி என் இருதயத்தை ஒருமுகப்படுத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# ஆரம்பத்திலே கொண்ட வைராக்கியம் எங்கே?

சிறு பிராயத்திலிருந்து தேவனுக்கு பயந்து அவர் வழியிலே நடக்கும் படிக்கு பயிற்சிவிக்கப்பட்ட வாலிபனொருவன், தன் உயர்கல்வியை வெற்றிகரமாக முடித்த பின்பு, குறிப்பிட்ட கம்பனியொன்றிலே நல்ல தொரு உத்தியோகத்திலே அமர்ந்தான். அவனுடைய வாழ்விலே பிரதிஷ்டையும், அர்ப்பணிப்பும் தாரளாமாக இருந்தது. கம்பனியிலே புதி தாக ஒரு நண்பனை சந்தித்தான். அவர்களுக்கிடையே நட்பு வளர்ந்து வந்தது. சில ஆண்டுகளுக்கு பின்னர், அந்த நண்பனானவன், அந்த வாலிபனை நோக்கி: குறிப்பிட்ட ஒரு நாட்டிற்கு, உல்லாச பிரயாணம் செல்லத்திட்டமிட்டிருக்கின்றேன். நீயும் என்னோடு இணைந்து கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டான். நண்பன் மேல் வைத்த நன் மதிப்பினால், அந்த வாலிபனானவன், சிந்திக்காமல், ஆம், நான் வருகின்றேன் என்று கூறிவிட்டான். இருவரும் உல்லாசப் பயணத்திற்குரிய ஆயத்தங்களை செய்து கொண்டிருக்கும் வேளையிலே, தகப்பனானவனர், அந்த வாலிபனை நோக்கி: மகனே, நீ போகும் இடத்தில் ஞாயிறு ஆராதனையைக் குறித்து ஏதாவது திட்டம் உனக்கிருக்கின்றதா என்று கேட்டார். அதற்கு அவன் மறுமொழியாக: இரண்டு கிழமை ஆராதனைகளில் கலந்து கொள்ளாவிட்டால் ஏதும் குறையப் போவதில்லை. என் நண்பனைப் பாருங்கள், அவன் வருடத்தில் சில நாட்கள் மட்டும், ஆராதனைக ளிலே கலந்து கொள்வான். அவன் எவ்வளவு செழிப்பாக வாழ்கின்றான் என்று கூறினான். அதை கேட்ட தகப்பனானவர், தேவனுடைய காரியங்களைக் குறித்த தன் மகனானின் மனநிலையை அவ்வளவு சீக்கிரமாய் மாறிப் போனதைக் கண்டு மனவேதனை அடைந்தார். சின்ன வயதி லிருந்து வாரந்தோறும் நீ ஜெபக்கூட்டங்களிலும், ஆராத னைகளிலும் தவறாமல் சென்று வந்திருக்கின்றாய். நீ இப்போது வய திற்கு வந்து விட்டாய். வாழ்வின் முக்கியமான தீர்மானங்களை எடுக்க வேண்டிய நாட்களில் வாழ்கின்றாய். எனவே எச்சரிக்கையாய் நடந்து கொள் என்று அறிவுரை கூறினார். பிரியமானவர்களே, இந்த உலகிலே செழிப்பாக தோன்றும் நட்புக்கள் எல்லாம் தேவனுக்கு பிரியமானவை களல்ல. அவை பார்வைக்கு நன்றாக இருக்கும், படிப்படியாக உங்கள் பிரதிஷ்டையிலிருந்து உங்களை வழுவிப்போகப் பண்ணிடும். எனவே, மிகவும் விழிப்புள்ளவர்களாக இருங்கள்.

**எபிரெயர் 3:14**

**நாம் ஆரம்பத்திலே கொண்ட நம்பிக்கையை முடிவுபரியந்தம் உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருப்போமாகில், கிறிஸ்துவினிடத்தில் பங்குள்ளவர்களாயிருப்போம்**

**ஜெபம்:** நித்திய வாழ்விற்கு அழைத்த தேவனே, நீர் எனக்குத் தந்த மேன்மையை நான் எந்தக் காலத்திலும், எந்தப் பருவத்திலும் இழந்து போகாதபடிக்கு எனக்கு பிரகாசமுள்ள மனக்கண்களை தந்து வழிநடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

திங்கள் | செப்டெம்பர் 11 | 📖 மாலை வாசகம் - 2 கொரி 4:6–9

# அனுதின பயற்சி

பாடசாலைக்கு படிக்கச் சென்ற மாணவனானவன், தன் பாடங்களை ஊக்கமாக கற்றுக் கொண்டு, அனுதினமும் கற்றவைகளை இறுதிப் பரீட்சை வரைக்கும் மீளாய்வு செய்து வந்தான். தேசிய ஓட்டப்பந்தையப் போட்டியில் தன் பெயரைப் பதிவு செய்து கொண்டவன், பந்தையப் போட்டியின் நாள்வரைக்கும் ஒழுங்காக பயிற்சிகளை செய்து வந்தான். இப்படியாகவே தங்கள் இலக்கை நன்றாக அறிந்தவர்கள், அந்த இலக்கை அடையும்வரை அயராது உழைத்து வந்தார்கள். மழையோ, குளிரோ, வெயிலோ, பனியோ அவர்களை தடுத்து நிறுத்துவதில்லை. அதிகாலையிலும், நள்ளிரவிலும், காலையிலும், மாலையிலும் அவர்கள் தங்கள் பயிற்சிகளை செய்ய ஆயத்தமுள்ளவர்களாகவே இருக்கின்றார்கள். கிழமைக்கு ஐந்து நாட்கள் பாடசாலையக்குச் சென்று வருகின்றார்கள். வேலை செய்கின்றார்கள் வாரந்தோறும் ஐந்து நாட்களும் தவறாமல் வேலைக்கு செல்கின்றார்கள். ஏன், சிலர் ஆறு அல்லது ஏழு நாட்களும் கூட கடுமையாக உழைக்கின்றார்கள். ஆனால், பரம அழைப்பின் பந்தையப் பொருளுக்காக மனிதர்கள் கிழமைக்கு ஒருநாளை நியமிப்பதைக் குறித்து முடிவில்லாத கேள்விகளை கேட்டுக் விமர்சித்துக் கொள்கின்றார்கள். பிரியமானவர்களே, ஒருவன் இந்த உலத்திலே அதிகமாக பிரயாசப்பட்டு, அநேக சாதனைகளை நிலை நாட்டி, தனக்கும் தன் சந்ததிக்கு மென்று ஆஸ்திகளைச் சேர்த்து, தேசங்கள் மத்தியிலே பிரபல்யமுள்ளவனாக இருந்தும், உலகிலே சுகதேகியாக வாழ்ந்தும், அவன் தன் ஆத்துமாவிற்கு கேடு விளைவித்தால், அதனால் அவனிற்கு பலன் என்ன? வானமும், பூமியும் அதிலுள்ள யாவும் ஒழிந்து போகும். மனிதனுடைய யோசனைகளும் அவனோடு மண்ணுக்குத் திரும்பும். இந்த உலக ஆஸ்தி, உயர்ந்த கல்வி, உலக செல்வாக்குகள் ஒன்றும் அவைகளை நாடி தேடுபவர்கள் விரும்பும் மனநிறைவை கொடுப்பதில்லை. அவை பரலோகத்திற்கு செல் வதுமில்லை. எவரையும் பரலோகத்தில் சேர்ப்பதும் இல்லை. எனவே ஆத்துமாவிற்கு அவசியாமானதை நாடித் தேடுங்கள். பரம அழைப்பின் பந்தைய பொருளின் இலக்கை அடையும்வரை இளைப்படையாமல் கிரியைகளை நடப்பியுங்கள். ஆண்டவர் இயேசுவினிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் நித்தியஜீவனை அடைவதும், அவனைக் கடைசிநாளில் எழுப்புவதும், பிதாவாகிய தேவனுடைய சித்தமாயிருக்கிறது.

**யோவான் 6:27**

**அழிந்துபோகிற போஜனத்திற்காக அல்ல, நித்தியஜீவன் வரைக்கும் நிலைநிற்கிற போஜனத்திற்காகவே கிரியை நடப்பியுங்கள்**

**ஜெபம்**: மெய்யான போஜனத்தையும், மெய்யான பானத்தையும் எங்களுக்கு அருளின பிதாவே, மறுபடியும் அழிந்து போகும் போஜனத்தை தேடி அழிந்து போகாதபடிக்கு பிரகாசமுள்ள மனக்கண்களை தந்து வழிநடத்துவீராக. இரட்ச கர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# வாழ்க்கையின் அனுபவங்கள்

வேதத்தை வாசித்து தியானிப்பது ஏன் சிலருக்கு சலிப்பாக (Monotonous) இருக்கின்றது? தினமும் தேவ சமுகத்தை நாடி ஜெபிப்பது ஏன் சிலருக்கு அலுப்பாக (Boring) இருக்கின்றது? சபை கூடி வருதலை குறித்த வாஞ்சை (Desire) சிலருக்கு அற்றுப் போய்விடுகின்றது. அவை களின் பலனையும் அவைகளினால் உண்டாகும் மனநிறைவையும் தங் கள் வாழ்விலே அனுபவிக்காதவர் களுக்கே, அவைகள் சலிப்பாகவும், அலுப்பாகவும் இருக்கின்றது. கர்த்த ருடைய வேதம் குறைவற்றதும், ஆத் துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கி றது (சங் 19:7). என்றும், ஆயிரம் நாளைப்பார்க்கிலும் உமது பிராகாரங்களில் செல்லும் ஒரே நாள் நல் லது. ஆகாமியக் கூடாரங்களில் வாசமாயிருப்பதைப்பார்க்கிலும் என் தேவனுடைய ஆலயத்தின் வாசற்படியில் காத்திருப்பதையே தெரிந்து கொள்ளுவேன் (சங் 84:10) என்றும் கர்த்தருடைய ஆலயத்திற்குப் போவோம் வாருங்கள் என்று எனக்கு அவர்கள் சொன்னபோது மகிழ்ச் சியாயிருந்தேன் (சங் 122:1) என்றும் வேதத்தின் மகத்துவத்தையும், தேவ சமுகத்தில் காத்திருப்பதின் மேன்மையையும் அறிந்து, உணர்ந்து அனுபவித்த தேவபக்தன் இவைகளைக் கூறியிருக்கின்றார். பிரியமானவ ர்களே, “கர்த்தருடைய சாட்சி சத்தியமும், பேதையை ஞானியாக்குகிற துமாயிருக்கிறது. கர்த்தருடைய நியாயங்கள் செம்மையும், இருதயத் தைச் சந்தோஷிப்பிக்கிறதுமாயிருக்கிறது. கர்த்தருடைய கற்பனை தூய் மையும், கண்களைத் தெளிவிக்கிறதுமாயிருக்கிறது. கர்த்தருக்குப் பய ப்படுகிற பயம் சுத்தமும், என்றைக்கும் நிலைக்கிறது மாயிருக்கிறது. கர்த்தருடைய நியாயங்கள் உண்மையும், அவைகள் அனைத்தும் நீதியு மாயிருக்கிறது. அவைகள் பொன்னிலும், மிகுந்த பசும்பொன்னிலும் விரும்பப்படத்தக்கதும், தேனிலும் தேன்கூட்டிலிருந்து ஒழுகும் தெளிதே னிலும் மது ரமுள்ளதுமாய் இருக்கிறது. அன்றியும் அவைகளால் உமது அடியேன் எச்சரிக்கப்படுகிறேன் அவைகளைக் கைக்கொள்ளுகிறதி னால் மிகுந்த பலன் உண்டு.” என்பதை தியானித்து அவைகளை உங் கள் வாழ்க் கையில் அனுபவ சாட்சியாய் ஏற்படுத்திக் கொள்ளுங்கள். உங்கள் கட்டுப்பாட்டிற்குள் இருக்கும் சின்னக்காரியங்களினாலே வேத த்தை பயிற்சி செய்ய ஆரம்பியுங்கள். சிறிதாய் விதைத்து பெரிதாய் அறுவடை செய்யுங்கள். கிறிஸ்துவோடு வாழும் வாழ்க்கையின் மேன் மைக்கு எதிராக செயற்படும் அந்தகார கிரியைகளைக் கண்டு கொள்ள பிரகாசமுள்ள மனக்கண்களை தரும்படி வேண்டிக் கொள்ளுங்கள்.

**சங்கீதம் 119:174**

**உம்முடைய வேதம் என் மனமகிழ்ச்சி.**

**ஜெபம்:** நிறைவான வாழ்விற்கு என்னை அழைத்த தேவனே, சத்திய வேதத்தின் மகத்துவங்களை நான் உணர்ந்து, மனமகிழ்ச்சியோடு நிறைவான வாழ்க்கை வாழ என்னை நீர் வழிநடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# வேதம் நிறைவேற இடங்கொடுங்கள்

மாலை வேளையிலே, ஓடி விளையாடிக் கொண்டிருந்த சிறுமியான வள் காலில் கல் தடக்கியதால் கீழே விழுந்துவிட்டாள். காலில் சிறு காயங்கள் ஏற்பட்டதால் அழுகையுடன் வீட்டுத் தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்த பாட்டனாரிடம் சென்றாள். அவர் அவளை தேற்றி, தன்னிடமிருந்த சிறந்த கைமருந்தை அவள் காயங்களில் போட்டார். சில நாட்களுக்குள்ளே சீக்கிரமாக அவள் காயங்கள் ஆறிவிட்டன. பல மனிதர்கள் மத்தியிலே வாழும் மனிதனுடைய வாழ்கையிலே மனதிலே ஏற்படும் காயங்களை யார் தவிர்த்துக் கொள்ள முடியும்? பிதாவாகிய தேவனுடைய பிள்ளைகள் என்று அழைப்பப்படும் நாமும் அதற்கு விதிவலக்கானவர்கள் அல்லர். ஆனால், மனக் காயங் களை ஆற்றுவற்குரிய அருமருந்தை நம்முடைய பிதாவாகிய தேவன் நமக்கு கொடுத்திருக்கின்றார். அந்த அருமருந்தாகிய தேவ வார்த்தை களானது நம்மை ஆற்றவதற்கு நாம் இடங் கொடுக்க வேண்டும். மனக் காயங்கள் ஏற்பட முன்பதாக, நீடிய பொறுமை, மன்னிப்பு, தேவ நீதிபோன்ற மேன்மையான காரியங்களை குறித்து தேவபிள்ளைகள் தாராளமாக பேசிக் கொள்கின்றார்கள். ஆனால், காரணத்தோடேயோ அல்லது காரணமின்றியோ மனதிலே காயங்கள் ஏற்படும் போது, கற்றுக் கொண்ட யாவற்றையும் மறந்து, குணப்படுத்தும் அருமருந்தா கிய வேதத்தை தள்ளிவிட்டு, தீவிரமாக, பழிக்கு பழி வாங்க வேண்டும் என்று, சுயநீதியை நடப்பிக்கின்றார்கள். இதனால் அவர்கள் வேதத்தை அறிந்திருந்தும், அதன் மகத்துவத்தை அனுபவ சாட்சியாக தங்கள் வாழ்வில் ருசிபார்ப்பதில்லை. மனக்காயங்கள் மனவேதனைகளை உண்டாக்கும். அப்படியான சூழ்நிலையில் நீங்கள் சிக்கிக் கொள்ளும் போது, கர்த்தருடைய வேதம் உங்கள் வாழ்வில் நிறைவேற இடங் கொடுங்கள். நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள் உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள் உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள் உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள். இப்படிச் செய்வதினால் நீங்கள் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவுக்கு புத்திரராயிருப்பீர்கள் அவர் தீயோர்மேலும் நல்லோர் மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள் மேலும் அநீதியுள்ளவர்கள் மேலும் மழையைப் பெய்யப்பண்ணுகிறார் என்று ஆண்டவராகிய இயேசு கூறியிருக்கின்றார். எனவே நீங்களும் உங்கள் பரம பிதாவைப் போல பூரண சற்குணராய் அனுதினமும் மாறுங்கள்.

**மத்தேயு 5:44**

உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள்.

**ஜெபம்**: என் பிதாவாகிய தேவனே, மனக் காயங்கள் ஏற்படும் நேரங்களிலே வேதத்தின் மகத்துவங்கள் என் வாழ்விலே நிறைவேறும்படிக்கு, நான் இடங் கொடுக்க எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்து வழி நடத்துவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# அதிகாரங்களின் குறைகள்

அதிகாரங்கள் மத்தியிலே இடம்பெறும் நடவடிக்கைகளைக் குறித்து நான் மிகவும் கரிசனையாக உள்ளேன். இன்னென்ன காரியங்களிலே தவறான முடிவுகளை எடுத்திருக்கின்றார்கள். என்னுடைய விஷயத்திலும் நீதி நடத்தப்படவில்லை என்று ஒரு வாலிபனானவன் தன் மனதின் ஆதங்கத்தை தன் பாட்டனாரிடம் கூறினான். அதற்கு அந்த பாட்டனானவர் அவனை நோக்கி: தம்பி, நான் சொல்வதை சற்று பொறுமையுடன் கேட்டுக் கொள். அதிகாரங்களிலே இருப்பவர்கள்தாங்கள் அறிந்த விடயங்களை யாவையும் எல்லோருக்கும் சொல்ல முடியாது. ஒருநாள், நீயும் அதிகாரிகளுடைய ஆசனத்திலே உட்காரும் போது அதை நீ அறிந்து கொள்வாய். அப்படி நீ சொல்வதெல்லாம் உண்மையாகவே இருந்தாலும், பொறுமையாய் இரு. தாவீதையும், சவுல் ராஜாவையும் பற்றி நீ உன் சிறு பிரயாத்திலிருந்தே அறிந்திருக்கின்றாய். இறைபற்றும் தேசப்பற்றும் உள்ளவனாகிய இளைஞனாகிய தாவீதினிடத்தில் எந்த குற்றமும் இல்லாதிருந்தும், ராஜாவாகிய சவுல், தாவீதை கொன்றுபோடும்படி சதிகளைச் செய்தான். அந்த வேளையிலும், தாவீதோ, காரியங்களை தன் கரத்தில் எடுத்துக் கொள்ளாமல், தேவனுடைய நேரம் வரும்வரை நீடிய பொறுமையோடு, துன்பங்களை சகித்து வந்தான். எனவே, நீ கற்றுக் கொண்ட வேதவார்த்தைகள் வாலிபர்களாயிருந்த யோசேப்புக்கும், தாவீதுக்கும், தானியேலுக்கும் மட்டுமல்ல, தேவனுடைய ஜீவனுள்ள வார்த்தைகள் இக்காலத்திலே உன்னில் நிறைவேற நீ இடங்கொடு என்று நல்லாலோசனை கூறினார். அந்தப்படி, இளைஞரே, மூப்பருக்குக் கீழ்ப்படியுங்கள். நீங்களெல்லாரும் ஒருவருக்கொருவர் கீழ்ப்படிந்து, மனத்தாழ்மையை அணிந்துகொள்ளுங்கள் பெருமையுள்ளவர்களுக்கு தேவன் எதிர்த்து நிற்கிறார், தாழ்மையுள்ளவர்களுக்கோகிருபை அளிக்கிறார்.ஆகையால், ஏற்றகாலத்திலே தேவன் உங்களை உயர்த்தும்படிக்கு, அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள். அவர் உங்களை விசாரிக்கிறவரானபடியால், உங்கள் கவலைகளையெல்லாம் அவர்மேல் வைத்துவிடுங்கள் என்று பரிசுத்த வேதாகமத்திலே நாம் வாசிக்கின்றோம். ஆம் பிரியமானவர்களே, வாலிபர் கள் மட்டுமல்ல, இக்காலத்திலே எல்லா வயதுடையவர்களும் வீட்டில், வேலையில், சபையில் பல காரியங்களைக் குறித்து நொந்து கொள் கின்றார்கள். தாங்கள் முற்றிலும் தேறினவர்கள் என்ற எண்ணமுடையவ ர்களாகி விடுகின்றார்கள். வேதவார்த்தைகள் உங்களில் நிறைவேறவும், நற்கனிகளால் உங்கள் வாழ்க்கையானது அலங்கரிகப்படவும் இடங் கொடுங்கள்.

**1 பேதுரு 5:6**

**அவருடைய பலத்த கைக்குள் அடங்கியிருங்கள்.**

**ஜெபம்**: காலங்களையும் சமயங்களையும் மாற்றி, ராஜாக்களைத் தள்ளி, ராஜாக்களை ஏற்படுத்துகிற தேவனாகிய கர்த்தாவே, நீர் குறித்த நேரம் வரை நான் பொறுமையோடு காத்திருக்க எனக்கு கற்றுத் தருவீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# சூழ்நிலைகள் மாறும் போது...

ஒரு தகப்பனானவன், தன் வீட்டுத் தோட்டத்தின் வளமிக்க நிலத்திலே, சில மிளகாய் நாற்றுகளை நட்டுக் கொண்டிருந்தான். அவனுடைய சின்ன மகனானவன், தான் பராமரிக்கும்படி, தனக்கும் ஒரு கன்றை தரும்படி தன் தகப்பனாவனிடம் கேட்டுக் கொண்டான். தகப்பனானவனனும், நட ப்பட்ட நாற்றுகளில் ஒன்றை அவனுக்கு காண்பித்து, நீ இந்த கன்றை பராமரித்துக் கொள் என்று கூறினான். சில நாட்கள் சென்ற பின்பு, மழை பெய்ய ஆரம்பித்தது. தோட்டத்தை பார்க்கச் சென்ற தகப்பனானவன், மகனானவனுடைய மிளகாய் கன்றை நட்ட இடத்தில் காணவில்லையே என்று தேடினான். அதற்கு அந்த மக னானவன், தகப்பனானவரை நோக்கி: அப்பா, மழையில் என் மிளகாய் கன்று அழிந்து விடுமோ என்று, அதை பிடுங்கி, ஒரு சாடியிலே வைத் திருக்கின்றேன் என்றான். அதைக் கேட்ட தகப்பனானவர், சிரித்துவிட்டு, அவன் பாட்டிற்கு அவனை விட்டுவிட்டார். சில நாட்களுக்கு பின், கடும் வெப்பமாக இருந்ததால், அந்த மகனானவன், சாடியிலிருந்து, மிளகாய் கன்றை பிடுங்கி, பெரிய மரத்தின் நிழலிலே நட்டான். பின்னர், காற்று வீசியபோது, அதை பிடுங்கி வேறு இடத்திலே நட்டான். பூத்து காய்க்க வேண்டிய நாட்களிலே அந்த மரமானது பட்டுப்போய் விட்டது. இந்த சம்பவத்தை வாசிக்கும் போது, ஒருவேளை நகைப்புக்குரியதாக இருக் கலாம். ஆனால், சற்று சிந்தியுங்கள். இன்று தேவ பிள்ளைகள் "புயலா னாலும், மழையானாலும், வெயிலானாலும், குளிரானலும் நான் ஆண்ட வர் இயேசுவுக்கு தொண்டு செய்வேன்" என்று பல வாத்தியக்கருவி களை நேர்த்தியாக இசைத்து, இனிமையாக பாடுகின்றார்கள். ஆனால், வாழ்க்கையிலே சின்ன பிரச்சனை ஏற்படும் போது, வேத வார்த்தைகள் தங்கள் வாழ்வில் நிறைவேற இடங் கொடுக்க மனதில்லாததால், சீக்கிர மாக, வீட்டை, பாடசாலையை, வேலையை, சபையை விட்டு வேறு இடத்திற்குச் சென்று விடுகின்றார்கள். செல்லுமிடத்தில் நிலைத்திருந்து கனி கொடுக்காமல், அந்த சின்ன மகனானவனைப் போல குழந்தை தனமாக நடந்து கொள்கின்றாரகள். கர்த்தருடைய ஆலயத்திலே நாட்டப் பட்டவர்கள் எங்கள் தேவனுடைய பிராகாரங்களில் செழித்திருப்பார்கள். கர்த்தர் உத்தமரென்றும், என் கன்மலையாகிய அவரிடத்தில் அநீதியி ல்லையென்றும், விளங்கப்பண்ணும்படி, அவர்கள் முதிர்வயதிலும் கனி தந்து, புஷ்டியும் பசுமையுமாயிருப்பார்கள். எனவே கர்த்தருடைய வார்த் தையில் நிலைத்திருந்து கனி கொடுங்கள்.

**சங்கீதம் 92:12**

**நீதிமான் பனையைப்போல் செழித்து, லீபனோனிலுள்ள கேதுருவைப்போல் வளருவான்.**

**ஜெபம்:** வாசற்படியிலே நின்று இதயக் கதவை தட்டுகின்ற தேவனே, உம்முடைய சத்தத்திற்கு என் இருதயத்தை திறந்து, உம் வார்த்தையி ன்படி ஜெயங்கொள்ளுகின்ற வாழ்க்கை வாழ கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# எங்கே நிலைத்திருப்பது?

பல ஆண்டுகளுக்கு பின், தன் சபையிலிருந்த விசுவாசயானவனொ ருவனை சந்தித்த மேய்ப்பரானவர், அவனை நோக்கி: எப்படி சுகமாய் இருக்கின்றாயா? இப்போதும், நீ சென்ற இடத்திலே தேவனை ஆரா தித்து வருகின்றாயா என்று அவனை விசாரித்தார். அதற்கு விசு வாசியானவன்: இருக்கும் இடமல்ல, கர்த்தரில் நிலைத்திருப்பது தான் முக்கியமானது எனக் கூறினான். அத ற்கு மேய்பரானவர்: மகனே, நான் உன்னை குற்றப்படுத்தும்படி அந்தக் கேள்வியை கேட்கவில்லை. நீ சொல்வது உண்மை, ஆம் கர்த்தராகிய இயேசுவிலே நிலைத்திருப்பதே ஒரு விசுவாசியானவனுக்கு தேவையா னதும், அவசியமானதுமாக இருக்கின்றது. கர்த்தரில் நிலைத்திருக்கின் றவன், அவருடைய வார்த்தையில் நிலைத்திருக்கின்றான். அவருடைய வார்த் தையில் நிலைத்திருப்பவனின் வாழ்க்கையிலே திவ்விய கனிகள் வெளிப்படும். ஆனால், முன்பு போலவே, உன்னுடைய வாழ்க்கையிலே எதிரிடையான காரியங்கள் சூழ்ந்து கொள்ளும்போது, நீ நிலைதவறி, காடுவிட்டு காடு மாறும் புலியைப் போல மாறிவிடுகின்றாய். நாம் எங்கி ருந்தாலும், உயிருள்ளவரை, இந்தப் பூமியிலே தான் வாழ வேண்டும். இது கோணலும் மாறுபாடான உலகம். நீ இந்த உலகிலே எங்கு சென் றாலும், எதிராளியானவனுடைய கண்களுக்கு மறைவாக இருக்கப் போ வதில்லை. விதிவிலக்கில்லாமல், எல்லோருக்கும் போராட்டம் உண்டு. அது போலவே, பட்சபாதமில்லாமல், தேவன் தம்முடைய ஆவியான வரை நமக்கு கொடுத்திருக்கின்றார். நிலைத்திருந்து கனி கொடு. போ ராட்டங்களை வேதவார்த்தையினாலும், ஜெபத்தினாலும் ஜெயம் கொள்ள வேண்டும் எனவும் அவனுக்கு என்று அறிவுரை கூறினார். பிரியமானவ ர்களே, நிலைத்தருந்து கனி கொடுக்கும் வேதவார்த்தை உங்களில் நிறைவேற இடங்கொடுங்கள். ஒருவன் நிலைத்திருப்பவன் என்று எத னால் அறிந்து கொள்ள முடியும்? அவன் சாதகமற்ற சூழ்நிலையிலும், தன் வாழ்விலே, தேவன் எதிர்பார்க்கும் கனிகளை வாழ்விலே வெளிக் காட்டுவன், தேவனுடைய வார்த் தையில் நிலைத்திருக்கின்றவன் என்று தன் வாழ்க்கை வழியாக சாட்சி பகிர்கின்றான். மனிதனுடைய மனம் மாறாமல், அவன் இடம் மாறுவ தால் அவனுக்கு அதிலே என்ன பலன். இடமாற்றம் அவன் வாழ்விலே தேவன் விரும்பும் மனமாற்றத்தை கொண் டுவந்தால் அது அவனுக்கு நல்லது. விசுவாசியானவனின் நங்கூரம் ஆண் டவர் இயேசுவில் இருப்பதால், அவன் ஆபத்தை கண்டு ஓடிப் போவ தில்லை. மாறாக அவன் இயேசுவில் நிலைத்திருந்து கனி கொடுப்பான்.

**யோவான் 15:5**

அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான்;

**ஜெபம்**: மிகுந்த கனிகளை கொடுக்கும்படி என்னை அழைத்த தேவனே, வாழ்வின் சூழ்நிலைகள் எப்படியாக இருந்தாலும், எப்போதும் கிறிஸது வுக்குள் நிலைத்திருந்து கனி கொடுக்க என்னை வழிநடத்தி செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

ஞாயிறு | செப்டெம்பர் 17 | 📖 மாலை வாசகம் – மத்தேயு 15:19–20

# உள்ளத்தில் உள்ளவைகளை யார் அறிவார்?

"மனிதன் முகத்தைப் பார்க்கின்றான், கர்த்தரோ இருதயத்தை பார்க்கின் றார்" நீங்கள் நான் எப்படி உடுத்துகின்றேன், எப்படி நடக்கின்றேன், எப் படி தலைமுடியை வெட்டிக் கொள்கின்றேன் என்று என் வெளித்தோற் றத்தைப் பார்க்கின்றீர்கள், ஆனால் கர்த்தர் என் இருதயத்தை அறி வார் என்று வாலிபனானவன் ஒருவன் தன் தகப்பனானவரிடம் கூறிக் கொண்டான். அதற்கு அவனுடைய தகப்பனானவர்: மகனே, நீ சொல் லுவது சரி! கர்த்தர் இருதயத்தை பார்க்கின்றார். நாளுக்கு நாள் உன் தலைமுடியை நீ பலவிதமாக வெட்டி வர்ணம் பூசிக் கொள்கின்றாய். அப்படியாக நீ அலங்கோல ப்படுத்த வேண்டும் என்ற எண்ணம் உன் முகத்தில் இருந்து வந்ததா அல்லது உன் இருதயத்தில் இருந்து வந்ததா? இடுப்பிலே இருக்க வேண்டிய உன் காற்சட்டை எங்கேயோ இருக்கின்றது. அப்படி போட் டுக் கொள்ள வேண்டும் என்ற ஆசை உன் முகத்திலிருந்து வந்ததா அல்லது உன் உள்ளத்தின் இருந்து வந்ததா? நீ இப்படியாக உடுத்த வேண்டும், இப்படியாக உன் தலையை அலங்கோலப்படுத்த வேண்டும், இப்படியாக நீ என்னோடு பேச வேண்டும் என்னும் தீர்மானங்கள் எங்கே எடுக்கப்படுகின்றது? நீ கூறியது போல கர்த்தர் உன் இருதயத்தை ஆரா ய்ந்து அறிகின்றவர் என்ற படியால் நீ மிகவும் எச்சரிக்கையுள்ளவனாக இரு. ஒருவேளை நீ உன் பேச்சினால் என்னை சமாளித்துக் கொள்ள முடியும் ஆனால் உன் உட்காருதலையும் உன் எழுந்திருக்குதலையும் கர்த்தர் அறிந்திருக்கின்றார். அவர் உன் நினைவுகளைத் தூரத்திலிருந்து அறிகின்றார். நீ நடந்தாலும் படுத்திருந்தாலும் உன்னைச் சூழ்ந்திருக்கி ன்றார். உன் வழிகளெல்லாம் அவருக்குத் தெரியும். உன் நாவில் சொல் பிறவாததற்குமுன்னே, அதையெல்லாம் கர்த்தர் அறிந்திருக்கின்றார். பிரியமானவர்களே, இந்தத் தியானத்திலே காரியத்தின் கருப்பொருளை நீங்கள் இலகுவாக அறியும்படியாக, வாலிபர்களையே உதாரணமாக காட்டப்பட்டுள்ளது. ஆனால், நாம் எல்லோருமே நம்முடைய பரம பிதா வுடைய பிள்ளைகளென்று அழைக்கப்படுகின்றோம். நம்முடைய நடை உடை பாவனையைக் குறித்ததீர் மானங்கள் யாவும், எதேட்சையாய் நடப்பதில்லை. ஒவ்வொரு மனிதனும் தன் இருயத்திலே தீர்மானம் செய் தபடி தன் தன் கிரியைகளை நடப்பிக்கின்றான். எனவே, நம் இருத யத்தின் நினைவுகளை அறிந்த தேவன் முன்னிலையில் உண்மையுள்ள வர்களாக நடந்து கொள்ளுங்கள். வேதனை உண்டாக்கும் வழிகளை நியாயப்படுத்தாமல், அவைகளை விட்டு விலகுங்கள்.

**சங்கீதம் 139:1**

**கர்த்தாவே, நீர் என்னை ஆராய்ந்து, அறிந்திருக்கிறீர்.**

**ஜெபம்:** என் மனதின் எண்ணங்களை அறிந்த தேவனே, நித்திய ஜீவனை கொடுக்கும் உம்முடைய வார்த்தைகளை என் துர்குணத்திற்கு மூடலாக பயன்படுத்தாமலிருக்க எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# வளர்ந்த பிள்ளைகள்

**2 பேதுரு 3:18**

நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள்

உயர்தர வகுப்பு கல்வியை முடித்து, பல்கலைகழகத்திற்கு படிக்கச் சென்ற வாலிபனானவன், ஒரு நாள் இரவு நள்ளிரவுக்கு பின் வீடு திரும்பினான். அவனுடைய தாயார் அவனை நோக்கி: மகனே, நீ ஏன் இப்படியாக நேரம் தாழ்த்தி வருகின்றாய் என்று தயவாய் கேட்டாள். கோபம் கொண்ட வாலிபனானவன், தாயை நோக்கி: எனக்கும் ஒரு வாழ்க்கை உண்டு, அதை நான் வாழ வேண்டும் என்று கடூரமான தொனியில் பதிலளித்தான். அதைக் கேட்டுக் கொண்டிருந்த தகப்பனானவர் அவனை நோக்கி: நீ யாரோடு பேசுகின்றாய் என்று அறிந்து, உன் வார்த்தைகளையும், தொனியையும் கவனித்துக் கொள் என்று கடிந்து கொண்டார். மனமுடைந்த தாயானவள் தகப்பனானவரை பார்த்து, அவன் முன்பு போல சின்ன பையன் அல்ல, வளர்ந்து விட்டான் எனவே அவனை விட்டுவிடுங்கள் என்று கூறினாள். அவனுடைய உடல் வளர்ந்திருக்கின்றது ஆனால் அவன் வளரவில்லை. மாறாக, அவன் தேவனை அறிகின்ற அறிவிலே முன்பிருந்ததைவிட குறைவு பட்டிருக்கின்றான். வளர்ந்தவர்களிடம் வயதிற்கேற்ப முதிர்ச்சியிருக்கும் என தகப்பனானவர் பதிலளித்தார். பிரியமான சகோதர சகோதரிகளே, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக என்பதே வாக்குத்தத்தமுள்ள முதலாங் கற்பனையாயிருக்கிறது. இது யாருக்கு கொடுக்கப்பட்டது? வாழ்க்கைபற்றி இன்னும் அறியாத ஐந்து வயது பிள்ளைக்கு கொடுக்கப்பட்டதா? அரசாங்க சட்டப்படி உரிமைகளை பெற்ற பதினெட்டு வயதுடைய வாலிபனானவனுக்கு கொடுக்கப்பட்டதா? அல்லது யாவருக்கும் கொடுக்கப்பட்டதா? ஒரு மனிதனுடைய வளர்ச்சி எதனால் அளவிடப்படுகின்றது? இன்று பலர் வயதிற்கு வந்துவிட்டோம் என்று அகங்காரம் கொள்கின்றார்கள். ஒருவன் வளரும் போது, அவனுடைய நற்பண்புகளும் கூடவே வளர வேண்டும். அப்படியில்லாத வளர்ச்சியில் பலன் இல்லை. தேவனுடைய பிள்ளைகளாகிய நம்முடைய வளர்ச்சி தேவனை அறிகின்ற அறிவினாலே அளவிடப்படும். அந்த வளர்ச்சியானது, ஆவியின் கனிகளினாலே உறுதிப்படுத்தப்படும். எனவே, நீங்கள் எத்தனை வருடமாக கிறிஸ்தவர்கள் என்ற பெயரை தரித்திருக்கின்றீர்கள் என்பதல்ல, எவ்வளவாய் தேவனை அறிகின்ற அறிவிலே வளர்ந்திருக்கின்றீர்கள் என்பதையும் உங்கள் வாழ்க்கையிலே நற்க னிகள் வெளிப்படுகின்றதா என்றும் ஆராய்ந்து பாருங்கள்.

**ஜெபம்:** பிதாவாகிய தேவனே, என் உள்ளான மனிதன் நாளுக்கு நாள் புதிதாக்கப்படட்டும். இயேசு கிறிஸ்துவின் சாயலிலே தினமும் வளர்ந்து, நற்கனிகளிலே பெருகும்படி என்னை வழிடத்திச் செல்வீராக. இரட் சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# அடுத்த படிக்கு முன்னேறுவோம்...

நான் அநேக வருடங்களாக துதி ஆராதனைகள், ஜெப கூட்டங்கள், வழிநடத்தி வருகின்றேன். வேதப் படிப்புக்கள், பிரசங்கங்கள் எடுத்து வருகின்றேன். சபையிலே இன்னும் சில உதவி ஊழியங்களை செய்து வருகின்றேன். நாடு கடந்து பல குக்கிராமங்களுக்கு சென்று அநேக ஏழை எளியவர்கள் பலனடையும் வகையில் உதவித் திட்டங்களை செய்து வருகின்றேன். நான் மேலும் வளர்ச்சியடைய என்ன செய்ய வேண்டும் என்று ஒரு மனிதனானவன் தன் மேய்ப்பனானவரிடம் கேட்டுக் கொண்டான். அவனை நன்கு அறிந்து, நேசித்து வந்த மேய்ப்பனானவர் அவனை நோக்கி: மகனே, நீ செய்து வருகின்ற ஊழியங்கள் நல்லது. இன்னும் அதிக ஊக்கமாக ஊழியங்களை முன்னெடுத்து செல்லு. நீ இன்னும் வளர வேண்டும் என்றால், உன் வாழ்க்கையிலே இன்னும் நீ மன்னிக்க முடியாதவர்களை உன் இருதயத்திலே தூக்கி திரிகின்றாயா என்பதை ஆராய்ந்து பார். ஊழியங்களிலும், நற்கிரியைகளிலும் வளர்ச்சியடைவது நல்லது ஆனால் அவைகளைவிட நீ ஆண்டவர் இயேசுவின் சாயலிலே வளர்வதுதான் மிகவும் அவசியமானது. “கர்த்தர்தாமே நம்முடைய பாவங்களுக்குத்த க்கதாக நமக்குச் செய்யாமலும், நம்முடைய அக்கிரமங்களுக்குத் தக்கதாக நமக்குச் சரிக்கட்டாமலும் இருக்கிறார். பூமிக்கு வானம் எவ்வளவு உயரமாயிருக்கிறதோ, அவருக்குப் பயப்படுகிறவர்கள்மேல் அவருடைய கிருபையும் அவ்வளவு பெரிதாயிருக்கிறது. மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரமாய் அவர் நம்முடைய பாவங்களை நம்மைவிட்டு விலக்கினார். தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறது போல, கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார்.” இவ்வளவாய் அவர் நம்மை மன்னித்து தம்முடைய மகா பெரிதான கிருபை இரக்கங்களை நம்மேல் பொழிந்திருக்க, அதில் கொஞ்சமாவது நாம் மற்றவர்கள்மேல் பொழிய வேண்டாமா என்று ஆலோசனை கூறினார். பிரியமானவர்களே,நீங்களும் பல நற்கிரியைகளை நடப்பித்து வரலாம். ஆனால், உங்கள் உள்ளத்திலே யாரையாவது மன்னி முடியாமல் இருக்கின்றதா? மன்னிப்பை நீங்கள் கொடுத்து, அதை மறந்து போய்விடாதவிடத்து, அது உங்கள் மனதிலே பெருஞ்சுமையாக இருக்கும். கர்த்தர் உங்களுக்கு காண்பித்து இரக்கத்தில் கொஞ்சத்தையாவது நீங்கள் மற்றவர்களுக்கு காண்பியுங்கள்.

**ரோமர் 8:29**

**தேவன் எவர்களை முன்னறிந்தாரோ அவர்களைத் தமது குமாரனுடைய சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு முன்குறித்திருக்கிறார்;**

**ஜெபம்:** நித்திய ஜீவனுக்கு என்று என்னை வேறு பிரித்த தேவனே, உம்மை அறிகின்ற அறிவின் வளர்ச்சியானது என் சுபாவங்கள் வழியாக உறுதிப்படும்படிக்கு எனக்கு கற்று தந்து வழிநடத்தி செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# வாழ்வில் வளர்ச்சி உண்டோ?

ஒரு கிராமத்திலே வசித்து வந்த வாலிபனானவன், தான் அந்தக் கிராமத்திலே ஒரு தலைவனாக திகழ வேண்டும் என்ற குறிக்கோளோடு, சமூக சேவைகள், தான தர்மங்கள், மதச் சடங்குகளை செய்து வந்தான். இளம் பிராயத்திலிருந்து, அந்த வளர்ச்சிக்காக அயராது உழைத்து வந்தான். அவனுக்கு மேலாக அநேக சிரேஷ்ட உறுப்பினர்களும், கிராமத்து மூப்பர்களும் இருந்த போதும், அவன் ஒவ்வொரு வருடமும், தன் பதவியிலே முன்னேறிக் கொண்டு வந்தான். அடுத்த படிக்கு போவதற்கு என்ன தேவை என்பதை அறிந்து, அதை அவன் மனதார நம்புகின்றானோ இல்லையோ என்பதைப் பற்றி கருத்திற்கொள்ளாமல், மக்கள் மனதை கவர்ந்து கொள்ள எதையும் எப்படியாவது செய்மு முடித்து, அந்த படியை தாண்டிக் கொள்வான். இப்படியாக உழைத்து வந்த அவன், மக்கள் மத்தியிலே பிரபல்யமானதால், அவன் சீக்கிரமாக அந்த கிராம சபையின் தலைவனாக நியமிக்கப்பட்டான். ஆனால், அவனுடைய வாழ்விலோ பொய் இருந்து வந்தது. ஒரு காரியத்திலே முன்னேற வேண்டும் என்று அவன் தீர்மானித்த பின், அதை அடைந்து கொள்வதற்கு உண்மையை மறைத்துக் கொள்வது அவனுக்கு இலகுவான காரியமாக மாறிவிட்டது. மக்கள் எதை கேட்க விரும்புகின்றார்களோ, அதன் நன்மை தீமையை பற்றி எண் ணமில்லாமல், தீமையை நன்மையைப் போல பேசிக் கொள்வான். இவனுடைய வளர்ச்சியை ஒரு மனிதனுடைய உண்மையான வளர்ச்சி என்று கூறிக் கொள்ள முடியுமோ. ஒருவேளை இந்த உலகம் அதை ஏற்றுக் கொள்ளலாம் ஆனால் மனிதனுடைய உள்ளந்தரியங்களை அறிகின்ற தேவன் முன்னிலையில் இது ஏற்புடையதாகுமோ? சற்று உங்கள் வாழ்க்கையை சற்று சிந்தித்துப் பாருங்கள். இன்று மனிதர்கள் கல்வியிலே, வேலையிலே முன்னேறிச் செல்ல வேண்டும் என்று பல தியாகங்களை செய்து அயராது உழைக்கின்றார்கள். மனிதனுடைய சுபாவங்களிலே தேவன் விரும்பும் வளர்ச்சியில்லாமல்,வெறும் பட்டம், பதவி, அந்த ஸ்துக்களை பெற்றுக் கொள்வதினாலே, அவனுடைய வாழ்விலே ஏற்படும் வளர்ச்சியினால் அவன் தேவனிடத்தில் எதையும் பெற்றுகொள்வானோ? நீங்கள் கிறிஸ்துவுடன்கூட எழுந்ததுண்டானால், கிறிஸ்து தேவனுடைய வலதுபாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவைகளைத் தேடுங்கள். இந்த உலகம் விரும்பும் வளர்ச்சியை மேன்மைபடுத்தாமல், தேவன் விரும்பும் திவ்விய சுபாவங்கள் உங்களில் வளர இடங்கொடுங்கள்.

**கொலோசெயர் 3:2**

பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடுங்கள்.

**ஜெபம்:** உம்முடைய திருக்குமாரனாகிய இயேசுவின் சாயலில் வளர என்னை அழைத்த தேவனே, இந்த உலகம் மேன்மைப் படுத்துபவைகளை தள்ளிவிட்டு, பரலோக மேன்மைகளை தேட எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பதவி உயர்வுகள்

ஒரு ஊரிலுள்ள சனசமூக நிலையத்தில், பல ஆண்டுகாலமாக தலை வராக இருந்து வந்த அந்த ஊரின் மூப்பரானவர், தனது வயதும், உடல் ஆரோக்கியத்தின் காரணமாகவும , ஒரு தலைவர் செய்ய வேண்டிய செயற்பாடுகளை தகுந்த முறையில் நடாத்த ஏற்றதாகயில்லை என்பதை அறிந்து கொண்டார். இதனால், சில நன்மையான செயற்திட்டங்கள் ஸ்தம்பிதமானது. வேறு சில திட்டங் களின் பலன் குறைவுபட தொடங் கியது. அந்த சனசமூக நிலைத்தை ஆரம்பிப்பதற்கு, அவரும் ஒரு கார ணகர்த்தாவாக இருந்த போதும், தன் னுடையநேரம்கடந்து விட்டது என்று அறிந்த போது, தன் பதவியிலிரு ந்து அவர் ஓய்வுபெற்றுக் கொண் டார். அவருடைய இடத்திற்கு யாரை நியமிப்பது என்ற பேச் சுவார்த்தைகள் ஆரம்பித்தது. சில கூட்டங்களில் பட்டிமன்றத்தைப் போல விவாதங்களை எழும்பிற்று. சில சமயங்களிலே அந்த விவாதங்கள் வாக்குவாதங்களாவும் மாறிவிட்டது. ஊரிலே, ஜனங்கள் மத்தி யிலே பலனளிக்கும் நற்செயல்கள் நடைபெறவேண்டும் என்பதை எண் ணாமல், யார் அந்த ஆசனத்திலே இருப்பது? யார் தலைவர்? என்பதே முதன்மையான நோக்கமாக மாறிவிட்டது. அவர்கள் மத்தியிலே மற்றய அங்கத்தவர்களைவிட அதிக வருடம் சேவை செய்து வந்த மனிதனொருவன் இருந்தான். அவன்தான் அடுத்த தலை வனாக வரவேண்டும் என்று அநேகர் விவாதித்துக் கொண்டிருந்தார்கள். அந்த மனிதனாவன், பல ஆண்டு காலமாக அவனுடைய தற்போதைய பொறுப்புக்களில் திறம்பட செய்து வந்த போதிலும், தலைவராக இருப் பதற்கு தனக்கு அழைப்பு இல்லை என்று அவன் நன்கு அறிந்திருந் தான், எனினும், தலைவரின் ஆசனத்தை குறித்து மனதில் இருந்த ஆசையினால், இந்த சந்தர்ப்பத்தை நழுவவிட்டால், இனி இப்படியான சந்தர்ப்பம் கிடையாது என்று தலைவர் பொறுப்பை ஏற்றுக் கொண் டான். அதனால், நாளடைவிலே பல சமுகசேவைகள் பின்னடைவுகளைக் கண்டது. இதனிமித்தம், அந்த ஊரிலே பல குழப்பங்கள் ஏற்பட்டது. பிரி யமானவர்களே, இந்த உலகமானது பதவி உயர்வு அடிப்படையிலே செயற்பட்டு வருகின்றது. ஆனால், நாமோ சர்வவல்லமையுள்ள தேவ னுடைய திருப்பணியை செய்யும்படி அழைக்கப்பட்டிருக்கின்றோம். நாம் பெற்ற அழைப்பிலே நிலைத்திருந்து, பிதாவாகிய தேவனுடைய சித்த த்தை நம் வாழ்விலே நிறைவேற்றும்படியாக முன்னேறிச் செல்வோமாக.

**2 பேதுரு 1:10**

**ஆகையால், சகோதரரே, உங்கள் அழைப்பையும் தெரிந்துகொள்ளுதலையும் உறுதியாக்கும்படி ஜாக்கிரதையாயிருங்கள்;**

**ஜெபம்:** என் தேவனாகிய கர்த்தாவே, வருடங்களையும், அனுபவங்க ளையும், பதவிகளையும் நோக்கிப் பார்க்காமல், நீர் எனக்குத் தந்த பொறுப்பை நான் உண்மையுள்ள மனதுடன் நிறைவேற்றி முடிக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# நம் வாழ்வின் நோக்கம் என்ன?

வியாபார ஸ்தானங்களிலே அமைப்புக்களும், ஒழுங்கு முறைகளும் ஏற்படுத்துகின்றார்கள். ஏன்? அந்த ஸ்தாபனத்தின் உரிமையாளர்களின் வியாபார நோக்கங்களை நிறைவேற்றி முடிப்பதற்காகவே, அமைப்புக்களும், ஒழுங்கு முறைகளும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. அதை தவறாக புரிந்து கொண்ட அதன் வேலையாட்கள், அந்த அமைப்புக்களாலும், ஒழுங்கு முறைகளாலும் உண்டான அதிகாரத்தையும் சுதந்திரத்தையும் துஷ்பிரயோகம் செய்து சக வேலையாட்களின் மத்தியிலே மனகுழப்பங்களை ஏற்படுத்துகின்றார்கள். இவ்வண்ணமாகவே, தேவ ஊழியத்தை நிறைவேற்றி முடிக்கும்படிக்கு சபையிலே அமைப்புக்களும், ஒழுங்கு முறைகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. பிதாவாகிய தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றி முடிப்பதே நம்முடைய வாழ்வின் கருப்பொருள் என்பதை விசுவாசிகள் அறிந்து கொள்ள வேண்டும். சில வேளைகளிலே, பதவி, பொறுப்புகளில் இருப்பவர்கள் தாங்கள் விசுவாசிகள் அல்ல என்று எண்ணிக் கொள்கின்றார்கள். தேவனாலே வேறுபிரிக்கப்பட்டு, ஆண்டவர் இயேசுவை தங்கள் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்ட யாவரும் விசுவாசிகளாகவே இருக்கின்றார்கள். நிர்வாக அமைப்புக்கள், ஒழுங்கு முறைகள் யாவும் சிறப்பாக இருக்கின்ற இடத்திலே, பிதாவாகிய தேவனுடைய சித்தம் நிறைவேற்றப்பட்டால், அந்த அமைப்புக்களாலும், ஒழுங்கு முறைகளாலும் பிரயோஜனம் உண்டு. ஆனால், தங்கள் அழைப்பை மறந்து போன விவாசிகள், பிதாவின் சித்தத்தை தங்கள் சொந்த வாழ்வில் நிறைவேற்றாமல், அமைப்புக்களையும், ஒழுங்குகளையும் சீராக வைத்திருப்பதால், அதனால் பலன் ஒன்றும் இல்லை. நம் வாழ்வில் ஏற்படும் எந்த சூழ்நிலைகள் மத்தியிலும், அதாவது அவை சதகமாக இருக்க லாம், அல்லது பாதகமாக இருக்கலாம். அவை யாவற்றின் மத்தியிலும், பிதாவாகிய தேவனின் திருச்சித்தம் நம் வாழ்வில் நிறைவேற நாம் இடங்கொடுக்க வேண்டும். இந்த வளர்ச்சியானது நம்மில் நாளுக்கு நாள் பெருக வேண்டும். ஆண்டவராகிய இயேசு தாமே, தம்முடைய பிதாவாகிய தேவனுடைய சித்தத்தை செய்யும்படி இந்த உலகத்திற்கு வந்தார். உலகமோ அவரை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனாலும், அவரோ, சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத் தாமே தாழ்த்தினார். எனவே, நாமும் நம்மை தாழ்த்தி, தேவ சித்தம் நம்மில் நிறைவேற ஒப்புக் கொடுப்போமாக.

**யோவான் 6:38**

என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்திறங்கி வந்தேன்

**ஜெபம்:** பரிசுத்தமுள்ள பிதாவே, என் வாழ்விலே ஏற்படும் எந்த சூழ்நிலையிலும், என் அழைப்பின் நோக்கத்தை நான் மறந்து போகாமல், உம்முடைய திருச் சித்தத்தை நிறைவேற்றி முடிக்க கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# சுபாவங்கள் மாற வேண்டும்

சுகாதரத் துறையில் படித்து பட்டம் வேண்டும் என்ற நோக்கத்துடன், ஒரு மாணவனானவன், நாட்டின் பிரபல்யமான சுகாதாரத் துறை கூட்டமைபில் (Health Association) பதிவு செய்து கொண்டான். அந்தத் துறையில் தேர்ச்சி பெறுவதற்கு ஒன்றன் பின் ஒன்றாக ஐந்து நிலைகளை (Levels), குறிப்பிட்ட காலத்திற்குள் படித்து முடிக்க வேண்டியதாயிருந்தது. படிப்பை முடித்து, பரீட்சைகள் யாவற்றிலும் தேர்ச்சி பெற்ற பின்னர், சுகாதார நிபுணர் என்று பட்டம் பெறுவதற்கு, இரண்டு வருடகள்அந்தத் துறையியின் வேலை அனுபவம் முன் நிபந்தனையாக இருந்தது. அந்த வேலை அனுபவத்தை பெற்ற பின்னர் அவன் சுகாதார நிபுணர் என்ற நிலையை அடைந்து கொண்டான். அதைத் தொடர்ந்து பிரபல்யமான சுகாதர அமைப்பு ஒன்றிலே, நல்ல சம்பளத்துடன் வேலையையும் பெற்றுக் கொண்டான். வேலையிலே சுகாதரத்தைக் குறித்த பயிற்சி நெறிகள் யாவையும், ஒழுங்காக, சிறந்த முறையில் நடப்பித்து வந்தான். வேலை முடிந்தது, வீடு திரும்பியதும், தன் வாழ்க்கையிலே அவனோ தான் செயற்படுத்தி வரும் பயிற்சி நெறிகளை ஒருபோதுமே கைக் கொள்வதில்லை. இன்று தேவ ஊழியத்தை நடப்பிப்தற்காக, இப்படியாக தகுந்த முறைப்படி, ஒழுக்க நெறியோடு வேதாகமக் கல்லூரிக்கு சென்று படித்து பட்டம் பெறுகின்றார்கள். சிலர், தொடர்ந்து இறையியலில் மேற்படிப்புக்களை முடித்து கலாநிதி பட்டம் பெற்றுக் கொள்கின்றார்கள். இவைகளினாலே நன்மைகள் உண்டு. ஆனால், படித்து பட்டம் பெறுவதால் மட்டும் நாம் ஆண்டவர் இயேசுவின் சாயலிலே வளர முடியாது. பொதுவாக படிப்பும் பட்டமும் மனிதர்களுடைய வாழ்விலே அவர்களை அறியாமலே ஒரு பெருமையை அவர்களுக்குள் உண்டாக்கி விடுகின்றது. ஆனால், நம்முடைய ஆண்டவராகிய இயேசுவோ, தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனு க்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரண பரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார். பிரியமானவர்களே, நாம் எந்த நிலையிலே இருந்தாலும், எவ்வளவு கற்றவர்களாக இருந்தாலும், உயர்விலும் தாழ்விலும் திவ்விய சுபாவங்களிலே வளர வேண்டும். நம் வாழ்வின் இறுதிவரை கிறிஸ்துவில் இருந்து சிந்தை எப்போதும் நம்மில் இருக்க வேண்டும். மனத்தாழ்மையோடு ஊழியம் செய்வோமாக.

**பிலிப்பியர் 2:5**

**கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது;**

**ஜெபம்:** உம்முடைய குமாரனாகிய இயேசுவின் சாயலுக்கு ஒப்பாயிருப்பதற்கு என்னை முன்குறித்த தேவனே, இந்த உலகத்தினால் உண்டாகும் பெருமை எனக்குள் குடி கொள்ளாதபடிக்கு என்னைக் காத்துக் கொள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# பரத்திலிருந்து வரும் ஞானம்

சிறு வயதிலிருந்தே தங்கள் மகனானவன் சீராக கல்வி கற்க வேண்டும் அவன் இருதயத்திலே கல்வியே முதன்மையானது என்று பெற்றோர்கள் பதிய வைத்தார்கள். அப்படியே அந்த மகனானவனும் படித்து, மேல்ப டிப்புக்காக உலகிலேயே சிறந்து விளங்கிய பல்கலைகழமொன்றிலே படித்து, அதிவி சேஷட சித்தி பெற்று, தேசத்திலேயே ஒரு சிறந்த விற் பனையாளராகவேலைபுரிந்து வந் தான். அதாவது புதிதாக உற்பத் தியாக்கப்படும் பொருட்கள் வாழ் விற்கு அவசியமானதோ, அவசி யமற்றதோ, கொள்பவர்கள் ஐசு வரியமுள்ளவர்களோ அல்லது சாராசரி உழைப்பாளிகளோ, அவைகளினாலே வரும் பின்விளைவுகள் எப்படிப்பட்டதோ என்பது ஒரு பக்கமிருக்க, எப்படியாவது மக்களின் மனதை கவர்ந்து, அவை யாவ ற்றையும் சந்தைப் படுத்தும் யுக்திகளை அவன் மிகவும் அறிந்திருந் தான். இத்தகைய யுக்திகளை உலக அறிவு அல்லது ஞானம் என்று மனி தர்கள் கருதுகின்றார்கள். இது உங்களுக்கு எப்படியாக தோன்றுகி ன்றது? சில தேசங்களிலே அநீதி செய்தவர்களை நீதிமான்கள் என்று நிருபிப்பதற்காக நீதிம ன்றங்கிலே எதிர்த்து வழக்காடுகின்றார்கள் என்று செய்திகள் வாயிலாக அறிகின்றோம். இப்படியாக இந்த உலகிலே கல்விமான்களாக கருதப்படுகின்ற சிலர் பரிசுத்த வேதாகமகம் கூறும் வார்த்தைகளுக்கு எதிராகவே செயற்பட்டு வருகின்றார்கள். தீமையை நன்மையென்றும், நன்மையைத் தீமையென்றும் சொல்லி, இருளை வெளிச்சமும், வெளிச்சத்தை இருளுமாகப் பாவித்து, கசப்பைத் தித்தி ப்பும், தித்திப்பைக் கசப்புமென்று சாதிக்கிறவர்களுக்கு ஐயோ! புரிதான த்திற்காகக் குற்றவாளியை நீதிமானாகத் தீர்த்து, நீதிமானின் நியாய த்தை அவனுக்கு விரோதமாய்ப் புரட்டுகிறவர்களுக்கு ஐயோ! (ஏசாயா *5:20-23*) என்று பரிசுத்த வேதாமம் கூறுகின்றது. கர்த்தருக்கு பயப்படு தலே ஞானத்தின் ஆரம்பம். எனவே, நீங்கள் எந்த வயதுடையவர்களா னாலும் மெய்யான தேவனாகிய கர்த்தர் இருக்கின்றார் என்று அறிந்து பொல்லாப்பைவிட்டுவிலகுங்கள். தீமையை விட்டு விலகுவதே செம்மை யானவர்களுக்குச் சமனான பாதை. தன் நடையைக் கவனித்திருக்கிற வன் தன் ஆத்துமாவைக்காக்கிறான். எனவே உங்கள் கால்களுக்கு தீப மாகவும், பாதைக்கு வெளிச்சமாகவும் இருக்கும் வேத வார்த்தை களின் வழியிலே நடவுங்கள். பரத்திலிருந்து வருகிற ஞானமோ முதலாவது சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதானமும் சாந்தமும் இணக்க முமுள்ள தாயும், இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்ததாயும், பட்சபாதமில்லா ததாயும், மாயமற்றதாயுமிருக்கிறது.

**நீதிமொழிகள் 9:10**

**கர்த்தருக்குப் பயப்படுதலே ஞானத்தின் ஆரம்பம்; பரிசுத்தரின் அறிவே அறிவு.**

**ஜெபம்:** என் தேவனாகிய கர்த்தாவே, இந்த உலகத்தினால் உண்டாகும் அறிவை பற்றிக் கொள்ளாமல், உமக்கு பயந்து, பரத்திலிருந்து வரும் மெய் ஞானத்தை பற்றி வாழ எனக்கு உணர்வுள்ள இருதயத்தை தந்தருள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# உகலபோக்கோடுள்ள பாலங்கள்

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த ஜனங்கள் தங்கள் முன்னோர்களின் ஆலேசானைகளின்படி எளிமையான வாழ்க்கையை வாழ்ந்து வந்தா ர்கள். அந்த ஊரிலிருந்து பட்டணத்திற்கு செல்வதற்கு பெரிய நதியொ ன்றை கடக்க வேண்டியிருந்ததால், அந்த ஊருக்கும் பட்டணத்திற்கும் இடையே ஒரு சிறிய பாளம் அமைக்கப்பட்டிருந்தது. ஜனங்கள், தேவை ஏற்படும் போது, பாலத்தை கடந்து, பட்டணத்திற்குசென்று தங்கள் பிழை ப்பிற்காக, தங்கள் விளைச்சல்களின் பலன்களையும்,தாங்கள் செய்யும் தள பாடங்களையும் சந்தையில் விற்று விட்டு, வாழ்க்கைக்கு அவசியமான பொருட்களை கொள்வனவு செய்து கொண்டு மறுபடியும் திரும்பிவி டுவார்கள். காலங்கள் கடந்து சென்றதும், புதிய தலைமுறையை சேர்ந்த வர்களில் சிலர், ஊருக்கும் பட்டணத்திற்கும் இடையே ஒரு சிறிய பால ம்தான் இருக்கின்றது. நாங்கள் பல மையில் தூரம் அந்த பாலத்திற்கு பயணம் செல்ல வேண்டும். எனவே புதிய பாளங்களை அமைப்போம். அதனால் நன்மைகள் பல உண்டு. பட்டணத்தின் முகவ ர்களின் பெரிய வாகனங்கள் வியாபராத்திற்காக இங்கே வர முடியும். அதனால், பொரு ட்களை கொள்வனவு செய்ய நாங்கள் அங்கே போகத் தேவையில்லை என்று கூறினார்கள். அவர்களின் ஆலோசனை கேட்ப தற்கு நன்றாக இருந்தது. ஆனால், அங்கிருந்த மூப்பர்களில் சிலர், ஜன ங்களே, நீங் கள் செய்யப் போவதையிட்டு எச்சரிக்கையாய் இருங்கள். இதுவரை க்கும் நாம் போதுமென்கின்ற மனதோடு வாழ்ந்து வந்தோம். இப் போதும் இருக்கும் ஒரு பாலத்தை நாங்கள் கவனமாக பராமரித்து, காவல் காத்து வருகின்றோம். பட்டணத்திற்கு பல பாலங்களை நாம் அமைப்பதால், நன்மைகள் உண்டு, ஆனால் அத்தோடு பெரிதான தீமை களும் அதன் வழியாய் உட்புகுந்து விடும் எனவே செய்யப்போவ தையிட்டு எச்சரிக்கையுள்ளவர்களாக இருங்கள் என்று கூறினார்கள். பிரியமானவர்களே, நாம் இந்த கோணலும் மாறுபாடுமான உலகிலே வாழ்கின்றோம். இன்று கல்வி, வேலை, நண்ப ர்கள், உறவுகள், அந்நியநுகம், களியாட்டம், உல்லாசப் பயணங்கள் என்று சில விசுவா சிகளும் கூட, தங்கள் வாழ்க்கையிலே உலகத்தோடு பல பாலங்களை அமைத்துக் கொள்கின்றார்கள். இந்த உலகத்தோடு பாளங் களை அமைக்க உங்களுக்கு சுதந்திரம் உண்டு. ஆனால், அவைகள் யாவும் ஆரம்பத்திலே நன்மையாகத் தோன்றும், அதே பாலங்களின் வழியாக தீமைகள் உட்புகுந்துவிடாதபடிகது எச்சரிக்கையுள்ளவர்களா கயிரு ங்கள். தேவனனே நன்மைகளை சம்பூரணமாய் கொடுக்கிறவர்.

**1 தீமோத்தேயு 6:6**

**போதுமென்கிற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகு ந்த ஆதாயம்.**

**ஜெபம்:** என் நாட்களை அறிந்த தேவனே, மனிதனுக்கு செம்மையாக தோன்றும் வழியிலே நான் வசதியை தேடி ஓடாமல், உம்முடைய வார்த்தையின்படி என் வாழ்வை காத்துக் கொள்ள கிருபை செய்வீராக. இரட் சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# வாசல்களை காத்துக் கொள்ளுங்கள்

ஒரு எளிமையான வீட்டிலே, வீட்டிற்கு முன்புறமும், பிற்புறமுமாக இரண்டு கதவுகள் இருந்தது. காற்றோட்டத்திற்கும், வெளிச்சத்திற்கென்றும் இரண்டு ஜன்னல்கள் அமைக்கப்பட்டிருந்தது. இரவிலே குடும்பத்தார் சமாதானமாய் உறங்கும் படிக்கும், கள்வர்கள் உள்ளிடாதபடிக்கும் கதவுகளையும் ஜன்னங்க ளையும் பூட்டி, கதவின் தாழ்ப்பாள்களை போட்டு விடுவார்கள். குளிர்நாட்களிலும், மழை காலத்திலும் அந்த கதவுகள், ஜன்னல்கள் வழியாக தண்ணீர் உள்ளே வராதபடிக்கு அவைகள் நேர்த்தியாகப் பூட்டப்பட்டிருக்கும். அந்த வீடு சிறிதாக இருந்ததால், கதவுகளும், ஜன்னல்களும் திறக்கப்பட்டிருக்கின்றதா அல்லது பூட்டப்பட்டிருக்கின்றதா என்பதை யாவருமே இலகுவாகவே கண்டு கொள்வார்கள். அந்த வீட்டின் எதிர்பக்கத்திலே, ஒரு பெரிய இடாம்பீகரமான மாளிகையிருந்தது. அந்த மாளிகைக்கு செல்வதற்கு பல கதவுகளும், ஜன்னல்களும் ஒவ்வொரு தட்டிலும் அமைக்கப்பட்டிருந்தது. அந்த தெருவை கடந்து செல்லும் ஊர் மக்கள் யாவரும், எளிமையான வீட்டையல்ல அந்த மாளிகையையே பார்த்த படி செல்வார்கள். அவர்கள் மட்டுமல்ல கள்வர்களுடைய கண்களும்கூட அந்த மாளிகையின் மேலேயே இரவும் பகலும் நோக்கமாக இருந்தது. எனவே அந்த மாளிகையின் ஜன்னல்கள், கதவுகள் ஒவ்வொன்றும் கவனமாக பராமரிக்கப்பட வேண்டும். நாம் இந்த பூமியிலே வாழும்வரை, நாம் வாழும் உலகத்தைவிட்டு முற்றாக பிரிந்து வாழ முடியாது. அதே வேளையிலே இந்த உலகத்தின் வேஷத்தை நாம் தரிக்காதடிக்கு மிகவும் எச்சரிக்கையுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும். ஒவ்வொரு விசுவாசியும் தன் இருதயமாகிய வீட்டை எல்லாக் காவலோடும் காத்துக் கொள்ள வேண்டும். இன்று சிலர், தங்கள் இருதயமாகிய வீட்டில், பல கதவுகளையும், ஜன்னல்களையும் அமைத்துக் கொள்கின்றார்கள். ஆசீர்வாதங்கள் என்ற போர்வையின் கீழே, அநேக உலக காரியங்கள் தங்கள் வாழ்க்கையிலே உள்ளிடுவதிற்கு இருதயத்தின் வாசல்களை திறந்து வடுகின்றார்கள். அவைகள் மனிதர்களின் இருதயத்தின் ஆசைகள். பிரியமானவர்களே, கர்த்தருடைய வார்த்தையினால் உங்கள் இருதயத்தின் வாசல் பலப்படுத்தப்படுவதாக. குதிரையின் பலத்தினாலும், காவல் வீரனுடைய கால்களினாலும் வீடு காக்கப்படுமோ? கர்த்தர் உங்கள் இருதயத்தைக் காக்காவிட்டால், எந்தக் காவலும் இந்த உலகத்தின் போக்கிற்கு நிலைநிற்கப் போவதில்லை.

**சங்கீதம் 147:13**

**அவர் உன் வாசல்களின் தாழ்ப்பாள்களைப் பலப்படுத்தி, உன்னிடத்திலுள்ள உன் பிள்ளைகளை ஆசீர்வதிக்கிறார்.**

**ஜெபம்:** பரிசுத்த வாழ்வு வாழ என்னை வேறு பிரித்த தேவனே, இந்த உலகத்தின் காரியங்களுக்கு என் இருதயத்தை திறந்துவிடாமல், உம்முடைய ஆலோசனைகளின் வழியில் இருதயத்தை காத்துக் கொள்ள கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# அநேகரால் புறக்கணிக்கப்படுகின்றேன்

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த இரண்டு மனிதர்கள் ஆலயத்திற்கு சென்று ஆராதித்து வருவது வழக்கமாகயிருந்து. அவர்களில் ஒருவன், உத்தம னும், தேவனுக்கு பயந்து அவர் வழியிலே நடப்பதால், உண்மையை பேசுகின்றவனாக இருந்தான். அவன் தீய பழக்கங்கள் எதுவும் இல்லாத சன்மார்க்கனும், நன்மை செய்கின்றவனுமாக இருந்தான். ஆனாலும், உலகத்தின்போக்கில் வாழும் ஊரா ரில் அநேகமானோர் அவனைப் பகைத்தார்கள். மற்றய மனிதனா வன், பொய் பேசாதவனாக இருந்த போதிலும், உண்மையை மறைக்கி ன்றவனாக இருந்தான். சில தேவ காரியங்களிலே சமரசம் செய்கின்ற வனாகவும் அவன் வாழ்ந்து வந் தான். அதானல், உலகத்தின் போக் கில் வாழும் ஊராரில் அநேகமான னோர் அவனை ஏற்றுக் கொண்டார்கள். இன்றைய உலகிலே இப்படி ப்பட்ட இரண்டு விதமான மனிதர்களை நாம் சபைகளிலே கூட காணா லாம். "உலகம் உங்களைப் பகைத்தால், அது உங்களைப் பகைக்கிற தற்குமுன்னே என்னைப் பகைத்ததென்று அறியுங்கள். நீங்கள் உலகத் தாராயிருந்தால், உலகம் தன்னுடையதைச் சிநேகித்திருக்கும் நீங்கள் உலகத்தாராயிராத படியினாலும், நான் உங்களை உலகத்திலிருந்து தெரி ந்துகொண்டபடியினாலும், உலகம் உங்களைப் பகைக்கிறது." என்று ஆண்டவராகிய இயேசு தம்முடைய சீஷர்களுக்கு கூறியிருக்கின்றார். எனவே இந்த உகல போக்கிலே வாழும் மனிதர்கள் உங்களை சிநேகிக் கும் போது நீங்கள் உங்கள் வாழ்க்கையை நன்றாக ஆராய்ந்து பார்க்க வேண்டும். சத்தியமானது அறிவிக்கப்பட்ட பின்னரும், உலகத்தின் போக்கிலே வாழும் மனிதர்கள் உங்கள் வீட்டிற்கு போக்கும் வரத்துமாக இருந்தால், அல்லது உங்களோடு உறவு பாராட்டும் போது, உங்களோடு அதிக நேரத்தை செலவிடும் போது, உங்கள் வீட்டிலே பேசப்படும் காரியங்களை நன்றாக ஆராய்ந்து பாருங்கள். உலக போக்கு எங்கே இருக்கின்றதோ, அங்கே உலக போக்கில் வாழ்கின்றவர்களின் இருதய மும் இருக்கும். உங்கள் வாழ்வின் தீர்மானங்கள் உங்களுடையது. ஆனால், தேவனுடைய வார்த்தைகள் மாறாதாயிருக்கின்றது. உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகையென்று அறியீர்களா? ஆகை யால் உலகத்துக்குச் சிநேகிதனாயிருக்க விரும்புகிறவன் தேவனுக்குப் பகைஞனாகிறான். பிரியமானவர்களே, இந்த முழு உலகமும் உங்க ளைப் பகைத்தாலும், நீங்கள் தேவனுக்கு பிரியமுள்ளவர்களாக நடந்து கொள்ளுங்கள்.

**1 யோவான் 2:17**

**உலகமும் அதின் இச்சை யும் ஒழிந்துபோம்; தேவனு டைய சித்தத்தின்படி செய்கி றவனோ என்றென்றைக்கும் நிலைத்திருப்பான்.**

**ஜெபம்:** அன்பின் தேவனே, இந்த உலகத்திற்கு பிரியமுள்ளவனாக வாழு ம்படிக்கு, நீர் தந்த பரிசுத்த வாழ்வை சமரசம் செய்யாதபடிக்கு, எப்போதும் உம்மை பிரியப்படுத்துகின்றவனாக வாழ நீர் கிருபை செய்வீராக. இரட் சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# உன் எதிரியின் விழுகையின் போது...

ஒரு ஊரிலே வாழ்ந்து வந்த விசுவாசியானவனொருவனுக்கு, அவனுடைய அயலிலுள்ள மனிதனானனொருவன், எதிராக பெரும் பாதகத்தை செய்துவிட்டான். அதனால், அந்த விசுவாசியானவனின் குடும்பமானது சொல்லமுடியாத வேதனைக்கூடாக கடந்து சென்றது. அந்த விசுவாசியானவன், தேவனுக்கு பயந்து அவர் வழியிலே நடக்கின்றவனாக இருந்ததால், தன் மனதின் பாரங்களை எல்லாம் கர்த்தருடைய சமுகத்திலே ஜெபத்தினாலும், வேண்டுதலினாலும் தெரியப்படுதி வந்தான். அநேக ஆண்டுகளுக்கு பின்பு, அவனுக்கு எதிரியாக பொல்லாப்பு செய்த மனிதனானவன், தீடிரென பெரிதான விபத்தொன்றிலே மரித்துப் போனான். அந்த செய்தியை கேள்விப்பட்டவிசுவாசியானவனின் மனதில் சந்தோஷமோ, திருப்தியோ ஏற்படவில்லை. மாறாக, அந்த மனிதனுடைய குடும்பத்தை குறித்த மனப்பாரம் அவனுக்கு ஏற்பட்டது. அந்த குடும்பத்தின் ஆறுதலுக்காகவும், விடுதலைக்காகவும் அவன் கர்த்தரை வேண்டிக் கொண்டான். எதிரிகள் விழும்போது,"அரசன் அன்றறுப்பான், ஆண்டவன் நின்றறுப்பான் என்று சில உலக மனிதர்கள் தங்கள் எதிரிகளின் விழுகையிலே திருப்தியடைகின்றார்கள். இவர்கள் பகையையும், வன்மத்தையும், கசப்புபையும் தங்கள்மனதிலே வைத்திருப்பதால், தீமைக்கு தீமை செய்யப்பட வேண்டும் என்று பலஆண்டுகளாகவே காத்திருக்கின்றார்கள். "உன் சத்துரு விழும்போது சந்தோஷப்படாதே. அவன் இடறும் போது உன் இருதயம் களிகூராதிருப்பதாக. கர்த்தர் அதைக் காண்பார், அது அவர் பார்வைக்குப் பொல்லாப்பாயிருக்கும் அப்பொழுது அவனி டத்தினின்று அவர் தமது கோபத்தை நீக்கிவிடுவார். பொல்லாதவர்களை க்குறித்து எரிச்சலாகாதே. துன்மார்க்கர்மேல் பொறாமை கொள்ளாதே." என்று பரிசுத்த வேதாகமத்தில் வாசிக்கின்றோம். ஆண்டவராகிய இயேசுவின் பரிசுத்த இரத்தத்தினாலே பாவமறக்கழுவப்பட்டு நீதிமான்களாக்கப்பட்டவர் களே, பொல்லாப் பிலே களிகூறும் இருதயம் உங்களுக்கு வேண்டாம்.உங்கள் எஜமானனாகிய இயேசு கூறியிருப்பதைக் கேளுங்கள். ஆண்டவர் இயேசு சொன்னார்: "உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள் உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள் உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள் உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம் பண்ணுங்கள்."

**நீதிமொழிகள் 24:17**

**உன் சத்துரு விழும் போது சந்தோஷப்படாதே; அவன் இடறும்போது உன் இருதயம் களிகூராதிருப்பதாக.**

**ஜெபம்**: நம்முடைய பாவங்களுக்குத்தக்கதாக நமக்குச் செய்யாமல் இருக்கின்ற தேவனே, உம்முடைய திருவசனத்தை கேட்டு அதன்படி செய்வதற்கு எனக்கு மனத் தாழ்மையை தந்து நடத்திச் செல்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# யாருடைய சாட்சியை நாடுகின்றீர்கள்?

இன்று வீட்டிற்கு விருந்தாளிகள் வருகின்றார்கள், நாங்கள் யாவரும் வீட்டை உள்ளும் புறமும் நன்றாக சுத்தப்படுத்தி பார்வைக்கு நேர்த்தியாக வைத்திருக்க வேண்டும் என்று ஒரு தாயானவள் தன் குடும்பத்தார் யாவருக்கும் கூறினாள். அதன்படிக்கு, குடும்பத்தார் யாவரும் வீட்டின் அறைகள், வெளிமுற்றம், பின்புறம் யாவற்றையும், சுத்தப் படுத்தி ஒழுங்கு படுத்தினார்கள். மாலையிலே வீட்டிற்கு வந்த விருந்தாளிகள் வீட்டைப் பார்த்துவிட்டு, இப்படித் தான் எங்கள் வீட்டையும் நாங்கள் வைத்திருக்க வேண்டும் என்று தங் கள் பிள்ளைகளுக்கு அந்த வீட்டை முன் உதாரணமாக காட்டினார்கள். விருந்தாளிகள் வந்து சென்ற பின்பு, அடுத்த நாளே, வீடானது முன்பு இருந்தது போலவே, ஒழுங்கற்ற நிலைமைக்கு திரும்பிற்று. பிரியமான சகோதர சகோதரிகளே, விருந்தாளிகளுக்கு நம்முடைய வீட்டை சுத்தமாக காண்பிப்பது நல்லது. அதாவது, நம்முடைய இருதயமாகிய வீடு, நம்முடைய வாழ்க்கை நடை முறைகள், நம்முடைய பேச்சுக்கள் யாவும் அவர்கள் முன்னிலையில் நேர்த்தியாக இருப்பது நல்லது. ஆனால், அது அவர்களுக்காக மாத்திரம் நேர்த்தியாக இருப்பது நல்லதல்ல. சில மனிதர்கள், சக விசுவாசிகள் முன்னிலையில், சபை மேய்ப்பர்கள், மூப்பர்கள் முன்னிலையில் தம் வாழ்க்கையை சாட்சியுள்ள வாழ்க்கை என்று காண்பித்து கொள்கின்றார்கள். அதனால், அவர்கள் பெரும் திருப்தியடைகின்றார்கள். அதிலே சொற்ப காலத்திற்கு ஒரளவு வெற்றியை கண்டு கொள்கின்றார்கள். காரியங்கள் வெளிப்படும் போது, இருக்கின்ற இடத்தைவிட்டு இன்னுமொரு இடத்திற்கு சென்று விடுகின்றார்கள். தங்கள் ஆவிக்குரிய வாழ்வின் உண்மை நிலைமை மேய்ப்பர் அறியாதபடிக்கு, தங்கள் வாழ்வில் எல்லாம் ஒழுங்காகவும், கிரமமாகவும் நடைபெறுகின்றது என்று காண்பித்துக் கொள்கின்றார்கள். ஆனால், நம்முடைய வாழ்வின் உண்மை நிலைமையை, பிரதான மேய்ப்பராகிய இயேசு கிறிஸ்துவுக்கு யாரால் மறைத்து வைக்கக்கூடும்? நம்முடைய வாழ்வின் இலக்கு என்ன? மனிதர்களின் அங்கீகாரத்தை மட்டும் நாம் பெற்றுக் கொள்வது போதுமானதா? தேவனாலேமாத்திரம் வருகிற மகிமையை தேடாமல், ஒருவராலொருவர் மகிமையை ஏற்றுக்கொள்ளு கிற நீங்கள் எப்படி விசுவாசிப்பீர்கள்? என்று ஆண்டவராகிய இயேசு தன்னை பின்பற்றி வந்தவர்களிடம் கேட்டார். உத்தமமானவர்கள் என்று தேவனாலே வரும் சாட்சியை பெறும்படிக்கு உண்மையுள்ளவர்களாக எப்போதும் நடந்து கொள்ளுங்கள்.

**சங்கீதம் 139:7**

**உம்முடைய ஆவிக்கு மறைவாக எங்கே போவேன்? உம்முடைய சமுகத்தைவிட்டு எங்கே ஓடுவேன்?**

**ஜெபம்:** என் தேவனாகிய கர்த்தாவே, என்னை ஆராய்ந்து, என் இருதயத்தை அறிந்துகொள்ளும்; என்னைச் சோதித்து, என் சிந்தனைகளை அறிந்துகொள்ளும். உண்மையுள்ள வாழ்க்கை வாழ எனக்கு கிருபை செய்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.

# தேசத்தின் ஷேமம்

தேசத்திலே தேவனை அறியாதவர்கள் பெலத்திருக்கின்றார்கள். இந்த தேசத்தின் முடிவு என்ன ஆகுமோ என்று ஒரு விசுவாசியானவன் தான் வாழும் தேசத்தைக் குறித்து துக்கமடைந்திருந்தான். ஒரு நாள் அவன் கர்த்தருக்கு பயந்து அவர் வழியிலே வாழும், அனுபமிக்க, முதிய ரொருவரை சந்தித்துப் பேசினான். அவர் அந்த விசுவாசியானவனை நோக்கி: மகனே, நான் சொல்வதை நன்றாக கேளு. ஆபிரகாம் என்ற மனித னுடைய நாட்களிலே, சோதோம் கொமோரா என்ற பட்டணங்கள், கர்த்தருடைய தோட்டத்தைப் போலவும் எகிப்துதேசத்தைப்போலவும் இருந்தது. ஆனால், ஜனங்களோ, பொல்லாதவர்களும்கர்த்தருக்கு முன்பாக மகா பாவிகளுமாய் இருந்தார்கள். இன்று இந்த உலகிலே நவீனமடைந்திருக்கும் பாவங்கள் சோதோமியரின் (Sodomite) பாவங்களாக இருக்கின்றது. கர்த்தர் சோதோம் கொமோராவின் கூக்குரல் பெரிதாயிருப்பதினாலும், அவைகளின் பாவம் மிகவும் கொடிதாயிருப்பதினாலும் அதை முற்றாக அழித்துப் போட சித்தங் கொண்டார். அப்போது, தேவனுடைய மனுஷனாகிய ஆபிராகம் கர்த்தரை நோக்கி: துன்மார்க்கனோடே நீதிமானையும் அழிப்பீரோ? பட்டணத்துக்குள்ளே ஒருவேளை ஐம்பது நீதிமான்கள் இருப்பார்கள், அதற்குள் இருக்கும் அந்த ஐம்பது நீதிமான்கள்நிமித்தம் இரட்சியாமல் அந்த ஸ்தலத்தை அழிப்பீரோ? அப்போது கர்த்தர் ஐம்பது அல்ல, சோதோமிலே பத்து நீதிமான்கள் இருந்தாலும், அவர்கள் நிமித்தம் அதை அழிப்பதில்லை என்றார். கர்த்தர்தாமே, தான் செய்யப் போவதை தன் தாசனாகிய ஆபிரகாமிற்கு வெளிப்படுத்தினார். தேசத்திலே பெலத்திருக்கும் பொல்லாதவர்களை பாராமல், நீதிமானகிய நீ கர்த்தரை நோக்கி விண்ணம் செய். கர்த்தர் தம்முடைய நீதிமான்களின் வேண்டுதல்களை கேட்கின்றவரா யிருக்கின்றார் என்று அறிவுரை கூறினார். பிரியமானவர்களே, தம்முடைய தாசர்களின் ஜெபத்தை கேட்கின்ற நம்முடைய தேவன் சர்வ வல்லமையுள்ளவர். அவர் சமுகத்திலே உங்களை தாழ்த்தி, அவரை நோக்கி தேசத்திற்காக வேண்டுதல் செய்யுங்கள். நாம் ஆராதிக்கும் தேவன், ராஜ்யங்களை மாற்றி, ராஜாக்களை தள்ளிப் போடுகின்றவர். அவர் தம்முடையவர் களை அறிவார். எனவே, பொல்லாப்பை கண்டு பயப்படாமல், தேசத்தின் சேமத்திற்காக ஜெபம் செய்யுங்கள்.

**1 பேதுரு 3:12**

**கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் நோக்கமாயிருக்கிறது, அவருடைய செவிகள் அவர்கள் வேண்டுதலுக்குக் கவனமாயிருக்கிறது;**

**ஜெபம்:** என்றும் மாறாத தேவனே, நான் இந்த உலகத்திற்கு ஒத்த வேஷந் தரிக்காமலும், உலகத்தினால் உண்டாயிருக்கும் சுயாதீனத்தினால், நான் தவறான தீர்மானங்களை எடுக்காதபடிக்கும் என்னைக் காத்துக் கொள்வீராக. இரட்சகர் இயேசு வழியாக ஜெபிக்கிறேன் ஆமேன்.